உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 17 திங்கட்கிழமை (01-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:36

# நோர்வேத் தூதுவர் புது யோசனையுடன் கொழும்பு வருகிறார்!



## தேக்க நிலையை அகற்ற முயற்சி!!

கொழும்பு,ஜனவரி1

இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் உள்ள தேக்க நிலை குறித்து ஆராய்வதற்காக நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இவ்வாரம் கொழும்பு வருகின்றார். புதிய யோசனைகள் அடங்கிய திட்டமொன்றை அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் சமர்ப்பிக்கவிருக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து லண்டன் சென்று விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் அவர் கலந்துரையாடுவார்.

நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்க நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்

(12ஆம் பக்கம் பார்க்க)



புத்தாண்டு புலரும் இந்த நன்னாளில் வாசகர்கள், விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள், விநியோக முகவர்கள், அபிமானிகள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் 'உதயன்' தனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றான்.

## யாழ்.நகருக்கு அச்சுறுத்தலாக இருந்த பிரதேசம் படையினர் வசம் எனத் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.1

குடாநாட்டில் யாழ்.நகருக்கு அச்சுறுத்தலாக இருந்த தனங்களப்பு மற்றும் அரியாலையை உள்ளடக்கிய சதுரகிலோ மீற்றர் பிரதேசத்தைப் படையினர் மீட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

குடாநாட்டின் வடக்கே கிளாலி, எழுதுமட்டுவாழ், நாகர்கோயில் ஆகிய பிரதேசங்களை இணைக்கும் நேரான நிலைகள் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளன என்றும்-

இந்தப் பணியை நிறைவேற்றியமைக்காகத் தனது பாராட்டுக்களை இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல களத்தில் உள்ள தளபதிகளுக்கு விசேடமாகத் தெரிவித்துள்ளார் என்றும் -

புதிய ஆண்டில் படையினர் தமது பரிசாக இதனை நாட்டுக்கு வழங்குகின்றனர் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## புலிகள் பின்வாங்கிச் செல்வது தந்திரோபாய நடவடிக்கையே!

### பி.பி.ஸி. கூறுகின்றது

லண்டன்,ஜன.1

புத்த தந்திரோபாய நடவடிக்கையாகவே விடுதலைப் புலிகள் தென்மராட்சி மற்றும் குடாநாட்டின் பகுதிகளிலிருந்து பின்வாங்குகின்றனர் என பி.பி.ஸி. தமிழோசை தெரிவித்தது.

தென்மராட்சியில் படையினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் வேண்டுமென்றே பின்வாங்கிச் செல்கின்றனர் என்றும் -

தமக்கு ஆளணி ஒன்றைத் திரட்டும் முயற்சியாகவே புலிகளின் செயற்பாடு அமைந்துள்ளது என்றும் - பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

படையினரின் அறிக்கையை மேற்கோள் காட்டி இந்தத் தகவலை வெளியிடுவதாக அது மேலும் குறிப்பிட்டது. (இ-3-8)

## வேட்டுக்களைத் தீர்த்து படையினர் புத்தாண்டை வரவேற்றனர்!

### தேவாலயங்களில் நள்ளிரவு ஆராதனை

யாழ்ப்பாணம்,ஜன.1

நள்ளிரவு புத்தாண்டு பிறந்த சமயம் யாழ்நகரிலும் குடாநாட்டின் மற்றும் பல பகுதிகளிலும் படையினர் பரா வெளிச்சக் குண்டுகளை ஏவியும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தும் புத்தாண்டை வரவேற்றனர்.

கப்பல்களிலிருந்தும் பீரங்கி

(12ஆம் பக்கம் பார்க்க)

### கைதான அறுவர் நீதிமன்றில் நேற்று ஆஜர்

யாழ்ப்பாணம்,ஜன.1

மிருசுவில் வடக்கு புதைகுழி விவகாரம் தொடர்பாக நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட ஆறு சிப்பாய்களும் நேற்றுப் பிற்பகல் சாவகச்சேரி நீதிவான் அபிரேமசங்கர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சிப்பாய்களான பி.ஜீ அபயவிக்கிரம, ஜீ.முனசிங்க, ஜீ.டி.சிவங்கா, பி.சமன்குமார, ஏ.டபிள்யூ.லக்மன் குமார, எச்.எம்.ஆர்.எஸ்.நியானகும்புற ஆகியோரே ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

ஏற்கனவே ஓர் அதிகாரி உட்பட 7 படையினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (இ-3)

### எழுச்சி நிகழ்வு தொடர்கிறது

'தமிழ் மக்களின் அபிலாசை சுயநிர்ணய உரிமையே' என்பதனை சர்வதேச சமூகத்திற்கு ஒருமித்த குரலில் வெளிப்படுத்தும் நோக்கில் பல்கலைக்கழக சமூகம் நேற்றும் எழுச்சி நிகழ்வுகளை நடத்தியது. விடுமுறைத் தினமாக இருந்த போதும் பெரும் எண்ணிக்கையானவர்கள் இதில் பங்குபற்றினர்.

மாணவர்கள் இன்று பீடங்களுக்குச் சென்று அவர்களுடன் கலந்துரையாடுவர்.

அத்துடன் இன்றிரவு அவர்கள் விழிப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொள்வர். (இ-3)

## நிபந்தனை அற்ற பேச்சை ஆரம்பிக்க அரசு தயார்

### ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு,ஜன.1

நிபந்தனைகள் அற்ற பேச்சைக் காலம் தாழ்த்தாது விடுதலைப்புலிகளுடன் ஆரம்பிக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்று அரசமைப்பு விவகார, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசசார்புப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்த விதமான நிபந்தனைகளும் இன்றிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக நாம் காத்திருக்கிறோம். நோர்வேப் பிரதிநிதியிடம் எமது நிலைமையை எடுத்துக் கூறியிருந்தோம். அவரின் பதிலை எதிர்பார்த்திருக்கின்றோம். நிபந்தனைகள் இன்றி பேச்சை ஆரம்பிப்பதற்கான பதில் கிடைத்ததும் பேச்சுக்களை ஆரம்பிப்போம் - என்றார். (இ-3)

## பல்கலை மாணவன் தாக்கப்பட்டாராம்

யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவரொருவர் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் பரமேஸ்வராச் சந்தியில் உள்ள காவலரண் பகுதியில் வைத்து இவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உடல் நோவு மற்றும் உள்காயம் காரணமாக இந்த மாணவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப மாணவன் காவலரண் பகுதியில் சைக்கிளை நிறுத்தியதாகவும் அதனைத் தொடர்ந்து அங்கிருந்த சிப்பாய்க்கும், மாணவனுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் அதன் பின்னர் மாணவன் தாக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (இ-3-5)

உதயன் நாள்காட்டி

இவ்வருடத்திற்குரிய உதயன் நாள்காட்டியை (நான்கு வர்ணங்களில்) நாளைய பத்திரிகையுடன் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் விநியோக முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்.

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்!

மன்னார்,ஜன.1

தலைமன்னாரில் கரை ஒதுங்கிய நான்கு இந்திய மீனவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி மீன்பிடித்துக் கொண்டிருந்த நான்கு மீனவர்கள் கடும் காற்றுக் காரணமாக தலைமன்னார் கடற்கரையில் கரை ஒதுங்கினர்.

இவர்களை தலைமன்னார் பொலீஸார் மன்னார் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். எதிர்வரும் 12 ஆம் திகதிவரை இவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது. (இ-3)

# 'உனக்காகவே வாழ்கிறேன்'

வித்யா என்ற புனைபெயரில் கமலா தம்பிராஜா எழுதிய முதலாவது நாவல்.

மேற்படி நூல் யாரிடமாவது இருந்தால் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும்.

விளம்பர இல.: 1168,
மே/பா. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/14588)

# 2001 ஆம் புதுவருட வாழ்த்துக்கள்

இவ்வாண்டு 3, 12, 21, 30 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு அதிர்ஷ்டகரமான ஆண்டாகும்
கல்வி, தொழில், முயற்சிகள், அரச பதவி உயர்வுகள் இசை, கலைத்துறை போன்றவற்றில் முன்னேற்ற பலன்களைக் காட்டும்.

மேலும்

அன்பு, சமாதானம் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவர்களுக்கும், பிரிந்து வாழும் குடும்பங்களுக்கும் ஒற்றுமையாக வாழ்வதற்கும், புதிய திருமணம் இவ்வாண்டு வழி சமைக்கும் ஆண்டாகும்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்-

'மங்களம்'
நவீன எண் சோதிட ஆலோசனை,
சேவை நிலையம்,
நெல்லியான் வீதி,
சுழிபுரம் மேற்கு. (C/14590)

நிறைகுடம் தளம்பாது

# விக்னா கல்வி நிறுவனம்

கலை, வர்த்தகம் 2003

ஆரம்பம்:- 06-01-2001 (9மணி)

| | | |
|---|---|---|
| கணக்கீடு<br>திரு.பாலவாசன் | பொருளியல்<br>திரு.விக்கி | வர்த்தகவியல்<br>திரு.நந்தீஸ் |
| அளவையியல்<br>திரு.சயந்தன் | தமிழ்<br>திரு.லிங்கம் | இந்துநாகரிகம்<br>திரு.பத்மராஜா |
| வரலாறு<br>திரு.அன்ரன் | நாடகமும் அரங்கியலும்<br>திரு.மதி | புவியியல்<br>திரு.ஐங்கரன் |
| கிறிஸ்தவம்<br>திரு.வசந்தன் | விக்னா கல்வி நிறுவனம் | பொதுஅறிவு<br>திரு.அன்ரன் |

(82384)

# SHAMROCK

29/3,J/SOMASUNDRAM AVE.

A/L 2003

✻ கணக்கீடு

Mr.தவா
B.Com(Hons)(Acc.spl)

ஆரம்பம்: 03/1 - Wed.3p.m
✻ COM. -Mr.பசீல் B.B.A.
✻ EC.Mr.இராஜேஸ்வரன் B.com.

✻ 2003 C/MATHS
Mr.தவசேகர்,B.Sc.

ஆரம்பம்: 3/1 - wed.4p.m
✻ PHY.Mr.ஸ்பெல்மன்
✻ CHE.Mr.KARAN
(C/14583)

✻ Gr.5 முதல O/L வரை

# லஷ்சுமி சினிமா

இணுவில்

இரு வேடம்
அஜித்குமார்,சிம்ரன் நடித்த

வாலி (82410)

(நீல்ஸ்) காட்சிகள் 10.30, 2.30 (பி.ந.)

# நாகம்ஸ்

சுன்னாகம்

டைட்டானிக்

(தமிழ் ~ நீல்ஸ்)

✪ டைட்டானிக் என்ற கப்பலுக்கு நடந்த பயங்கரம்.
✪ இது ஒரு உண்மைச் சம்பவம். இது ஒரு உண்மையான காதல் சம்பவம்.
✪ உலகில் உள்ள எந்தச் சக்திகளாலும் அவர்கள் இருவரையும் பிரிக்க முடியாது. (82408)

காட்சி நேரங்களில் மாற்றம்
புதிய நேரம்: 10.30, பி.ப. 2.30.

# ராஜா யாழ்ப்பாணம்

விஜய், மோனிக்கா, ரம்பா,மணிவண்ணன்
மற்றும் பலரின்
வித்தியாசமான நடிப்பில் (C/14587)

மின்சாரக்கண்ணா

காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.)

# பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம் இணுவில்

A/L 2001 DAY CLASS

பொருளியல்
S.வரதராஜன் B.A.(Hons)

| நாள் | யாழ்ப்பாணம் | இணுவில் | விடயம் |
|---|---|---|---|
| செவ்வாய், புதன் | 8.30 - 10.00 | 10.15 - 11.45 | வினா விடை வகுப்பு |
| வியாழன், வெள்ளி | 8.30 - 10.00 | 10.15 - 11.45 | பாடத்திட்ட வகுப்பு |

ஆரம்பம் :- 02. 01. 2001 செவ்வாய் (82345)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கமுத்து மாணிக்கவாசகர்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சுன்னாகத்தில் வசித்து வந்தவருமாகிய திருமதி தங்கமுத்து மாணிக்கவாசகர் 29.12.2000 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் (P.W.D.ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், மணிமேகலை, சுவாமிநாதன், (Singapore), இந்திரநாதன் (Canada), மண்டலநாயகம்(Peninsula Group, Kandy), ரஞ்சனி, ரதி (France), ரட்ணகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவலிங்கம் (Singer Industries - Colombo), நிர்மலாதேவி (Singapore), ஜெகராணி (Colombo), இந்திரகுமாரி (Bank of Ceylon - Peradeniya), எஸ்.பி.சிவஞானம் (Attorney - at - Law), பொன்னம்பலம் (France), குகனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விக்கி (Engineering Student U.K), பிரகாஷ் (France), பிரதீஸ் (Technical College, Student), கேசன் (Singapore), சிந்துஜா (Student - Udvil Girls' College), பிரசன்னா, நிரோஷன் (Students- Trinity College Kandy), சுபாஜினி(High school - Kandy), அனோஜன் (France), பிரணவன், பிரசாந்தி (Colombo) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02[illegible]01) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

வங்கி ஒழுங்கை,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

த[illegible]ல்:
திருமதி மணி[illegible]லை சிவலிங்கம்
([illegible]ள்)
(82404)

## திருமதி பரிமளம் நடராசா

கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பரிமளம் நடராசா நேற்று (31-12-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பையா நடராசாவின்(அப்பையா பிரபலவர்த்தகர்)அன்பு மனைவியும், ரகுநாதன்(கனடா), ரஞ்சநாதன்(கனடா),ரங்கநாதன் (கனடா), ஜெகநாதன், பிரபாகரன், காஞ்சனா, மாதினி, மாதவி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகுணா(கனடா),கலா(கனடா) [illegible] தன்(இலங்கை வங்கி - யாழ்ப்பாணம்) [illegible] ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01-01-2001) திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொக்குவில் மேற்கு நாகலிங்கம் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள்அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.

தகவல்:
நா.கணேசநாதன்
(மருமகன்)
(82403)

## திருமதி மல்லிகாதேவி சுப்பிரமணியம்

சாவகச்சேரி டச்சு வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி மல்லிகாதேவி சுப்பிரமணியம் நேற்று (31-12-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ச.சுப்பிரமணியம்(முன்னாள் பிரதம கணக்காளர்,தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - கௌரியம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து - தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் சசீந்திராவின் அன்புத்தாயாரும் தியாகேசனின் அன்புமாமியாரும், கணேசன் சிவபாதம், கனகசபை, சீதாதேவி, சாவித்திரிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசுப்பிரமணியம், சரோஜினிதேவி, சுபத்திராதேவி, தனலட்சுமி, தேவகாந்தன், கமலேஸ்வரி, தமயந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02-01-2001) செவ்வாய்க்கிழமை அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

S.Subramaniam,
8,Rhonda Street,
Pendle Hill, NSW 2145,
Australlia T.P 61-2-98964828

தகவல்:
தா.கனகசபை
127/1 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.T.P.-2862
(82401)

## திருமதி சின்னத்துரை செல்லம்மா

கொட்டைக்காடு அராலியைப் பிறப்பிடமாகவும் அராலி மேற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்லம்மா அவர்கள் (31-12-2000) நேற்றுக்காலமானார்.

அன்னார் அமரர் சின்னத்துரையின் V.C செல்லக்கண்டு) அன்பு மனைவியும், திருமதி ரஞ்சிதமலர்,திருமதி யோகேஸ்வரி, திரு அற்புதலிங்கம், ஆனந்தலிங்கம், இரத்தினமாலா ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் இந்திரராசா, பத்மகுமாரன் (கோகாஸ் ஆடையகம், யாழ்ப்பாணம்) திருமதி பதமராஜினி, திருமதி கண்ணகிமாலா ஆகியோரின் அன்பு மாமியாரும், ரமேஷ்குமார், தினேஸ்குமார், விஜிதரன், விஷ்ணுவர்த்தன், வேணுகரன், ரம்யா, அற்புதராசா, தரணி, நிஷாந்தினி, ஆகியோரின், அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.
(82402)

தகவல்:
பத்மகுமாரன் (மருமகன்)
கோகாஸ் ஆடையகம்
இல.32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# புத்தாண்டு வாழ்த்துக்கள்

அமைதி, சமாதானம், நிலைபெற்று நாட்டு மக்கள் வாழ்வில் சாந்தி நிலவவேண்டி பிறக்கின்ற புத்தாண்டில் தமது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றனர்



ஆஷிகா சில்க்ஸ்

நிறுவனத்தினர் சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு

– ஆஷிகா சில்க்ஸ் –

சிறியோர் முதல் பெரியோர் வரை, ஆடவர், மகளிர் அனைவருக்கும் வெளிநாடுகளிலிருந்து பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட சகலவிதமான றெடிமேட் ஆடை வகைகளுக்கும், இதோ யாழ்.நகரில்!

ஆஷிகா சில்க்ஸ் 4,நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். (C/14591)

உதயன்

## புத்தாண்டு வேண்டுதல்

இருபத்தோராம் நூற்றாண்டின் முதலாவது ஆண்டு இன்று புலர்கிறது. புதிய வருடத்தில் மட்டுமன்றி புதிய நூற்றாண்டிலும் நாம் மனிதர்களாகவே வாழ்வது எப்படி, எங்கள் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்று சிந்தித்துத் திட்டமிடும் நாள் இன்றாகும்.

இருபத்தோராம் நூற்றாண்டு, கடந்துபோன இருபதாம் நூற்றாண்டு போன்று இருக்கப் போவதில்லை. தனது வாழ்க்கையை முன்னேற்ற வேண்டும் என்ற ஆர்வத்துடனும் அக்கறையுடனுமே மனிதன் மாற்றங்களைச் செய்வது இயல்பு. அந்த வகையில் புதிய நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சி மேலும் துரிதமடையும் என எதிர்பார்க்கலாம்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விஞ்ஞான வளர்ச்சி வேகமாக இருந்தது. பல நவீன மாற்றங்களைக் கொண்டு வந்தது. ஆனால் மனிதன் தனக்குள்ள பண்புகளையும், மாண்புகளையும் மறந்து ஆன்மீகத் துறையில் மட்டுமன்றி தனது உலகியல் வாழ்விலும் பல படிகள் கீழிறங்கியதைக் காண முடிந்தது.

மனித நாகரிகம் வளர்வதற்குப் பதிலாக அநாகரிகமே ஓங்கி நின்றது. அமைதியில்லாத வாழ்க்கையே உலகின் பல இடங்களிலும் விரவிக் காணப்பட்டது. வன்செயல்களும், கலகங்களும், போரும் உலகில் மலிந்து மக்களைச் சோதனைக்குள்ளாக்கின.

ஆகையால், விஞ்ஞான வளர்ச்சி மனிதனின் நாகரிகத்தைக் கேவலமாக்கவும் மனித மாண்புகளை மலினப்படுத்தவும் வகை செய்யாத ஒன்றாக இருபத்தோராம் நூற்றாண்டு அமைய வேண்டும். அந்த நூற்றாண்டின் முதலாவது வருடம் அதற்கு வித்திடுவதாகப் பிறக்கட்டும். உலக மக்கள் எல்லோரினதும் சிந்தனையும், திட்டமிடுதலும் அதற்கானதிடசங்கற்பமும் மக்களைமக்களாக்க உதவட்டும் மாக்களாகமாற்றாதிருக்கட்டும்.

ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், கடந்த இரண்டு தசாப்தங்கள் பெரும் சோதனைகளும், வேதனைகளும் நிறைந்தனவாகவே கடந்தன. மக்கள் அழிவும் உடைமை நாசமும், வாழ்க்கை மாய்வும், உறவுகள் பிரிவும், இடம்பெயர்வும், திறந்த வெளிச் சிறைச்சாலை வாழ்வும் பாதுகாப்பு உத்தரவாதமற்ற நிலையும், வன்செயல்களும் ஒருபக்கத்தில் வாட்டின.

அடுத்த பக்கத்தில் மனித மாண்புகள், மனித விழுமியங்கள், மனிதாபிமானம், சமய பண்பாட்டுச் சிர்கேடுகள் மலிந்து மனிதத்துவம் கேள்விக்குறியாக்கப்பட்டது. அறநெறிகள், தர்மங்கள், சமூக நீதிகள், வரன்முறைகள் மறக்கப்படும் அபாய நிலை உருவாகியது. பகைமை, மோசடி, லஞ்சம், ஊழல், திருட்டு என்ற அநியாயங்கள் மலிந்த பூமியாகியது.

புதிய ஆண்டு போர் நீங்கிய ஒன்றாக, நீதியுடன் கூடிய சமாதானமும் அமைதியும் மலரும் ஒன்றாக அமைய வேண்டும் என்பதே தமிழர்கள் எல்லோரதும் வேண்டுதலும் பிரார்த்தனையுமாக உள்ளது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றவல்ல ஒரு நல்ல தீர்வு கிடைத்தால் மட்டுமே, தமிழர்கள் ஏனைய மக்கள் போன்று கௌரவமாகவும் சுயமரியாதையுடனும், சிறுபடறும் வாழ வழிபிறக்கும்.

அரசியல் தீர்வு தமிழர் பிரதேசத்தில் நல்லாட்சி ஒன்றை நிறுவ வகை செய்தால், அதுவே இந்த நூற்றாண்டின் பெரும் சிறப்பாக அமையும். புத்தாண்டு தினமான இன்று எல்லோரும் அதற்காகப் பிரார்த்திப்போமாக!

## குடாநாட்டில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை, மருந்துத்தட்டுப்பாடு:

# 20 கோரிக்கைகளை முன் வைத்து

# மருத்துவ அதிகாரிகள் சங்கம் மகஜர்

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ். குடாநாட்டு மருத்துவமனைகளிலும் யாழ். போதனா வைத்தியசாலையிலும் நிலவி வரும் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை, வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை, மருந்துப் பொருள்கள் மற்றும் உபகரணங்களுக்கு நிலவும் பற்றாக்குறை ஆகியவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்குக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அரச மருத்துவர் அதிகாரிகள் சங்க யாழ். கிளை இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

குடாநாட்டு மருத்துவமனைகளின் இன்றைய நிலையையும், நிபுணர்கள், மருத்துவர்கள் மருந்துகள் என்பவற்றுக்கு நிலவும் பற்றாக்குறைகளை விரிவாக விளக்கியும் அவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பான 20 கோரிக்கைகளை முன்வைத்தும்—

சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்துக்கு மகஜர் ஒன்றையும் அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

★ குடாட்டுக்கு வெளியேயான வைத்தியசாலைகளில் தற்காலிகமாகப் பணியாற்ற அனுமதிக்கப்பட்டவர்கள் உடனே திருப்பியனுப்பப்பட வேண்டும். அல்லது அவர்களுக்கு நிரந்தர இடமாற்றம் வழங்கி அவர்களது பணியிடங்கள் வெற்றிடமாக அறிவிக்கப்பட வேண்டும்.

★ யாழ். மாவட்டத்தில் மாகாண அமைச்சின் கீழான வைத்தியசாலைகளிலும் போதனா வைத்தியசாலையிலும் நிலவும் சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் உடனே எடுக்கப்பட வேண்டும்.

★ கடைசியாக வெளியிடப்பட்ட உள்ளகப் பயிற்சிக்குப் பின்னான, நியமனத்திற்கான வெற்றிடங்களின் பட்டியல் உடனடியாக இரத்துச் செய்யப்பட்டு குடாநாட்டிலுள்ள வெற்றிடங்கள் முழுமையாகக் காட்டப்படும் புதிய பட்டியல் வெளியிடப்பட வேண்டும்.

தெற்கில் உள்ள மத்திய மருந்தகங்களுக்கு வைத்திய அதிகாரிகளை நியமிக்கமுன் இங்குள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

★ உள்ளகப் பயிற்சிக்கு வடக்கு — கிழக்குக்கு வைத்தியர்களை அனுப்புவதில்லை என்று இலங்கை வானொலி அறிவித்ததில் உள்ள உண்மை தெளிவாக்கப்பட்டு, அப்படியொரு முடிவு எடுக்கப்பட்டது உண்மையானால் உடனடியாக அந்த முடிவு இரத்துச்செய்யப்பட்டு தொடர்ந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு குறைந்தது 26 உள்ளகப்பயிற்சி வைத்தியர்களாவது நியமிக்கப்பட வேண்டும்.

★ யாழ் போதனா வைத்தியசாலையில் அதிகரித்துச் செல்லும் நோயாளர் எண்ணிக்கைக்கு ஏற்பவும் போதனா வைத்தியசாலையில் இருக்க வேண்டிய விசேட சிகிச்சைப் பிரிவுகளுக்கு ஏற்பவும் வைத்திய நிபுணர்கள், அதிகாரிகள் ஆகியோரின் எண்ணிக்கைகள் மீள்கணிப்பிடப்பட வேண்டும்.

★ யாழ் போதனா வைத்திய சாலையில் உள்ளகப் பயிற்சி வைத்தியர்கள் நியமிக்கப்படாத மற்றும் நியமிக்கப்பட முடியாத பிரிவுகளில் பதில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகளின் எண்ணிக்கை ஒரு பிரிவுக்கு ஆகக் குறைந்தது 3 முதல் 4 ஆகப் பேணப்படல் வேண்டும்.

★ சுகாதார அமைச்சு இங்கு வெற்றிடங்கள் இருப்பதை அறிவிக்காமலும் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்காமலும் இருக்கும் நிலையில் இடமாற்ற உத்தரவு பெற்றவர்கள் அவர்கள் விரும்பினால் உடனடியாக விடுவிக்கப்படுவதுடன், விடுவிக்கப்படும் வரை இவர்களின் புதிய பணி நிலைகள் வெற்றிடமாக வைத்திருக்கப்படல் வேண்டும்.

★ இடமாற்றம் பெற்றுப் பின் தமது சுயவிருப்பின் பெயரில் இங்கு சேவையாற்ற முன்வருபவர்களுக்கு இதுவரை காலமும் போலல்லாது உடனடியாக அவர்களது பதவிகளில் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

★ குடாநாட்டின் சகல வைத்தியசாலைகளுக்கும் அவற்றின் தரத்திற்கேற்ப உடனடியாக வைத்திய உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், கூபாடங்கள் ஆகியன வழங்கப்பட வேண்டும்.

★ யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஒரு போதனா வைத்தியசாலையில் இருக்க வேண்டிய சகல பிரிவுகளும் (புதிய பிரிவுகள் உட்பட) இயங்கும் வகையில் சகல உபகரணங்களும் விரைவில் வழங்கப்பட வேண்டும்.

★ யாழ் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவு, ஒரு மாதத்திற்குட்பட்ட குழந்தைகளுக்கான சிகிச்சைப்பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, சத்திர சிகிச்சைக் கூடம் ஆகியவற்றுக்காகக் கோரப்பட்ட சகல உபகரணங்களும் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

★ யாழ். போதனா வைத்தியசாலையின் மனநல மருத்துவப்பிரிவு விடு இ திட்டமிட்டபடி இடிக்கப்பட்டு புதிய கட்டடத்தை அடுத்த ஒரு வருடத்தினுள் கட்டுவதற்கான நிதி உடனடியாக ஒதுக்கப்படுவதுடன் கட்டுமானப் பொருள்களை நேரடியாகக் கொழும்பில் இருந்து கொண்டுவர அனுமதி வழங்கப்பட வேண்டும்.

★ ஆய்வுகூடக் கருவிகள், எக்ஸ்—ரே இயந்திரங்களுடன் ஏனைய போதனா வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஆய்வுக்கருவிகள் எமக்கும் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

★ ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள், எக்ஸ்—ரே பிலிம்கள், மருத்துவப்பொருள்கள், சத்திரசிகிச்சைப்பொருள்கள் என்பன தேவைப்படும் அளவுக்கு வழங்கப்பட வேண்டும். மேலும் குறைந்தது அரச வைத்தியசாலைகளுக்காவது இவற்றை எடுத்து வருவதற்குப் பாதுகாப்பு அனுமதி பெறப்பட வேண்டும் என்ற விதி உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

★ வைத்தியர்கள் தனியே அல்லது குடும்பமாக குடாநாட்டுக்கு வெளியே செல்வதற்குப் பயண அனுமதி பெறுவதிலும், பயணச்சீட்டுப் பெறுவதிலும் உள்ள தாமதங்கள் நீக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் இவற்றை வழங்க உடனடியாக உத்தரவிடப்பட வேண்டும்.

★ வருடாந்த ரயில் பயண 'வோரண்டு'களை கப்பல் அல்லது விமானக்கட்டணத்திற்காக மாற்றி வழங்கவேண்டும். 'வோரண்டு'களை பயன்படுத்தக்கூடிய போக்குவரத்து வசதியை செய்ய வேண்டியது அரசின் கடமையே என நம்புகிறோம்.

★ யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் இருந்து உடல்களை அப்புறப்படுத்த பழையபாதையை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் அல்லது நோயாளர்களுக்கும், ஊழியர்களுக்கும், வைத்தியர்களுக்கும் அசௌகரியமேற்படுத்தாத வேறு பாதை ஏற்படுத்தப்படவேண்டும்.

★ யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியும் ஆய்வுகூடமும் இரவிலும் இயங்க அனுமதிப்பதுடன் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

★ வடக்கு— கிழக்கிலுள்ள வைத்தியர்கள் மேலதிக வேலைப்பளுவைச் சுமப்பதாலும், நாட்டில் அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அதிகூடிய விலைவாசியைக் கொண்ட பிரதேசமாக யாழ்ப்பாணம் இருப்பதாலும் வடக்கு கிழக்கில் கடமை புரியும் தென்னிலங்கையைச் சேர்ந்த வைத்தியர்கள் எதிர்நோக்குவதாக அமையும் கருதும் இடர்களை வடக்கு கிழக்கைச் சேர்ந்த வைத்தியர்களும் எந்த மாறுபாடும் இன்றி எதிர்நோக்குவதாலும், இங்கு கடமையாற்றும் அனைத்து வைத்திய நிபுணர்களுக்கும், வைத்திய அதிகாரிகளுக்கும் உள்ளகப் பயிற்சி வைத்தியர்களுக்கும், 100 சதவீத இடர்காலக் கொடுப்பனவும், ஆயுள் காப்புறுதியும் வழங்கப்படவேண்டும்.

ஆகிய கோரிக்கைகள் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

எமது இந்தக் கோரிக்கைகள் தொடர்பான தங்கள் உடனடி நடவடிக்கையையும் பொறுப்பான உடன்பாடான பதிலையும் எதிர்பார்க்கின்றோம்.

எதிர்வரும் ஜனவரி 14ஆம் திகதிக்கு முன்னர் எமது கோரிக்கைகள் அனைத்துக்கும் சாதகமான பதில் தங்களிடமிருந்து எமக்கு கிடைக்காவில்லை என்றால், ஜனவரி 15 முதல் தொழிற்சங்க விதிகளுக்கு அமைவான தொழிற்சங்க நடவடிக்கைகளில் எமது தொழிற்சங்கம் இறங்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்—

என்றும் அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5-15)

## நாளை

மார்கழி 18

செவ்வாய்க்கிழமை

திதி: ஸப்தமி

முற்பகல் 11.29 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி

முன்இரவு 8 23 வரை.

சுபநேரம்: 11 00–12.30

ராகுகாலம்: 3 30 – 5.00

(பகலுக்கும் இரவுக்கும் பொதுவான நேரப்படி)

## வலி.மேற்குப் பிரதேசத்தில் மேட்டு நிலப் பயிர் அழிவு

வலிகாமம் மேற்கு, ஜன. 1

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் 10 ஏக்கர் மேட்டு நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை முழுதாக அழிந்துவிட்டது.

தொல்புரம் கமநல சேவை நிலையத்தின் விவசாயப் போதனாசிரியர், பிரதேச மட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார்.

பிரதேசமட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் கடும் வரட்சி காரணமாக செட்டியாமடம், அராலி சுழிபுரம் ஆகிய பகுதிகளிலேயே நெற்செய்கை நூறு வீதம் அழிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நஷ்டஈடும் நிவாரணமும் வழங்குவது போன்று விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும்.

என்று விவசாய சம்மேளனத்தின் பிரதிநிதி ஒருவர் இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

வலி மேற்குப் பிரதேசத்தில் சுமார் 1080 ஹெக்டேயர் நிலப்பரப்பிலேயே இந்த ஆண்டு பெரும்போக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது. (இ-175)

## சங்கானை கூட்டுறவுச்சங்கத்தின் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

சண்டிலிப்பாய், ஜன. 1

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு வடக்கு—கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட 31—99 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய சம்பள உயர்வை யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்று வழங்குவது என்று சங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை சங்கத் தலைவர் அ. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற சங்க இயக்குநர் சபைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இ-135)

## உதயவாக்கு

நீர்வாணமாயிருப்போர் மத்தியில் சட்டை போட்டவன் கோமாளி.

- எகிப்து

## கண்ணீர்ப் பூக்கள்

### பொன்னையா கமலரூபன்

(விரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**மாணவர்கள், தமிழ்த்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(82394)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 13 |
| — | — |
| 02 | 01 |
| — | — |
| 1907 | 2000 |

### அமரர் அம்பலவாணர் இராமலிங்கம்

**திதி: 01–01–2001 (ஸப்தமி)**

பாசத்தின் உறைவிடமே — ஐயா!
வேசம் என்றறியா தெய்வமே — ஐயா!
பாசம் எமை வாட்டுகிறதே — ஐயா!
வேகும் மனமாற வழி சொல்லும் — ஐயா!
போதனைகள் கூறி நின்ற தெய்வமே — ஐயா!
வேதனை குறைய வழி சொல்லும் — ஐயா!
வேலவனின் அடி புகுந்த எம் — ஐயாவே!

வேலவன் அடிகளில் சாந்தி பெற
பிரார்த்திக்கின்றோம்,

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

காரைக்கால்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(82396)

## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 | 03 |
| — | — |
| 08 | 12 |
| — | — |
| 1927 | 2000 |

### அமரர் சின்னத்தம்பி தங்கவேல்

(பிரபல புகையிலை வர்த்தகர்)

எமது அன்புத் தந்தை சிவபதமடைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து இறுதிக் கிரியைகளுக்கு உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், மருதங்கேணி பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினர், அஞ்சலிப் பிரசுரத்தை வெளியிட்டவர்கள், அஞ்சலி உரை நிகழ்த்தியோர் மற்றும் நோய்வாய்ப்பட்டு மருத்துவ மனையில் இருந்தபோது உதவி புரிந்த மருத்துவத் துறையினருக்கும் நன்றி கூறுவதுடன், நாளை (02- 01- 2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக்கிருத்திய அந்தியேட்டி நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்,**
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
T. வதனரூபன் G. S

மிந்திரன் அம்மன் கோயிலடி,
துன்னாலை,
கரவெட்டி.

(82390)

## பிரதேச செயலகத்துக்கு புதிய கட்டடம்

காரைநகர், ஜன. 1

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் ஊர்காவற்றுறை வைத்திய சாலைக்கு முன்பாக அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் புதிய கட்டடத்தை நவீன வசதிகளுடன் அமைப்பதற்கு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு ஒரு கோடியே 10 லட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

(ஐ — 73)

## தையல் டிப்ளோமா பயிற்சி நெறி

சண்டிலிப்பாய், ஜன. 1

வடக்கு —கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் நடத்தப்படும் 2001 ஆம் ஆண்டுக்கான தையல் டிப்ளோமா பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை அளவெட்டி கிழக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

வலி. வடக்குப் பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் இதனை ஆரம்பித்து வைப்பார்.

ஒருவருடகாலம் நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறியில் 35 யுவதிகள் பயிற்சி பெறவுள்ளார்கள் என்று வலி. வடக்குப் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கலைமகள் சிவராசா தெரிவித்தார்.

(ஐ-133)

## விவசாயப் பயிற்சி நெறி

வலிகாமம் தெற்கு, ஜன.1

மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் குறுகிய கால விவசாய போதனா, சாதனா பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நான்கு மாத காலம் கொண்ட விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம் போன்ற துறைகளை உள்ளடக்கியதாக இவ் இலசவ பயிற்சி நெறி அமைந்திருக்கும்.

இப்பயிற்சி நெறியை பயில விரும்பும் ஜி.சி.ஈ சாதாரண தரம் கல்விகற்ற 16 க்கும் 26 க்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக் காலத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு உதவுதொகை வழங்கப்படும்.

அத்துடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப் பயிற்சி நெறியில் சேர விரும்புபவர்கள் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித்தகைமைப் பத்திரங்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் விவசாய நிறுவனத்தில் நடைபெற உள்ள நேர்முகப் பரீட்சைக்கு நேரில் வருகை தருமாறு நிறுவனத்தின் அதிபர் அறிவித்துள்ளார்.

(ஐ–152)


## மலிவு விற்பனை

அண்ணா பாம்
இணுவில்.

இறைச்சிக் கோழி (Broiler) மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அண்ணா தொழிலகம்,
இணுவில்.

(சி-14578)

வாடிக்கையாளர்களுக்கு எமது இனிய
## புத்தாண்டு வாழ்த்துக்கள்
## ரூபி நகை மாளிகை

111/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021-2828 (சி-14386)

## அதிர்ஷ்டம் அழைக்கிறது
## பொய்யாமொழி ஜோதிடம்

அன்பான வாடிக்கையாளர்களுக்கு
புதுவருட நல்வாழ்த்துக்கள்

செவ்வாய், சனி நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலடியிலும், ஞாயிறு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம்.

(82261)


இளவாலை - புனித யூதாததேயு சனசமூக நிலைய
## அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பு முடிவு
## வெளியீடு

2000 — 05 — 07 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப் படவிருந்த மேற்படி நிலைய சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு 2000 — 12 — 25 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ஆம் | பரிசு | சீட்டு | இலக்கம் | 1004 |
| 2 ஆம் | ,, | ,, | ,, | 1316 |
| 3 ஆம் | ,, | ,, | ,, | 2709 |

ஆறுதல் பரிசு இலக்கங்கள்:-
541 727 2394 2121 1037

அதிர்ஷ்டசாலிகள் 31—01—2001 இக்கு முன்னர் வந்து பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்.

**- நிர்வாகத்தினர்.**

இளவாலை. (82313)


2001 ஆம் ஆண்டில் தங்கள் இல்லத்தில்
தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியின்
ஒளிபரவட்டும்

**'அன்னை பல உயரிய கருத்துக்களின் சங்கமம்'**

கையடக்கமான நூல்

**விலை ரூபா 50**

இந்த நூல் வாங்குவோருக்கு அழகிய கலண்டர் இலவசமாக வழங்கப்படும்.

வெளியீடு:

### ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
### பருத்தித்துறை

நூல் கிடைக்குமிடங்கள்:

- ★ சிவசம்பு களஞ்சியம்
  மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
- ★ லக்ஷ்மி ஸ்ரோஸ், நெல்லியடி.
- ★ கவிதா ஸ்ரோஸ், பருத்தித்துறை.
- ★ பாலன் விற்பனை நிலையம்.
  பருத்தித்துறை.

செயலாளர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை. (சி/14357)


## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதமகுருவும்,
1989 ஆம் ஆண்டு எமது ஆலயத்தின் முதலாவது
மஹா கும்பாபிஷேகத்தின் பிரதம குருவும்
பரிபாலன சபையின் போஷகருமாகிய

அமரர் பிரதிஷ்டா பூஷணம்

### சிவஸ்ரீ சுவாமிநாத. இராஜேந்திரக் குருக்கள்

**20 - 12 - 2000 அன்று முருகனடி சேர்ந்தார்.**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கோப்பாய் தெற்கு - அத்தித்தோட்டம்**
**அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள்**
**ஆலய பரிபாலன சபை.**

பதிவு - இல. HA / 05 / JA / 653. (82367)

# புதிய சிந்தனைகளும் நல்ல கருமங்களும் தேவை

அன்பர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக் கூறுவதில் அகமகிழ்கிறேன். மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ இறையருள் வேண்டி துர்க்கா தேவியை இறைஞ்சுகிறேன்.

"கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே" என்பது மணிவாசகப் பெருந்தகையின் அரிய வார்த்தை. காலம் பெறுமதியானது அவப்பொழுதில் காலத்தைத் தவறவிடாது தவப்பொழுதாக ஒவ்வொரு நாள்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். புத்தாண்டு முதல புதிய சிந்தனைகளை உள்ளத்தில் இருத்தி நல்ல காரியங்களை நிறை வேற்ற ஒவ்வொருவரும் திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவரும் தமக்குரிய கடமைகளை தூய சிந்தனையோடு ஒப்பேற்ற வேண்டும். சமூகப் பொறுப்புள்ள பிரஜைகளாக அனைவரும் வாழவேண்டும்.

உலகம் முழுவதும் அமைதியும் சமாதானமும் நிலைக்க வேண்டும் என்பது ஆன்மீக உலகின் பேரவா. எங்கள் திருநாட்டில் சமாதானப் பிரகடனம் உருவாகி மக்கள் பூரண நிறைவோடு வாழ இவ்வாண்டு நியதி செய்யும என அனைவரும் எதிர்பார்த்த வண்ணம் புத்தாண்டை வரவேற்போம்.

மனதிலுறுதி வேண்டும், வாக்கினில் இனிமை வேண்டும், நினைவு நல்லது வேண்டும் என்ற பாரதியாரின் சிந்தனையைக் கருத்திற் கொண்டு நல்ல எண்ணத்தோடு புத்தாண்டை அனைவரும் வரவேற்றுக் கொள்ளுங்கள். மனிதர்களாகிய நாம் மானிடப் பண்பைப் பேணி இவ்வையகத்தில் புனிதமானவர்களாக வாழ முற்படவேண்டும்.

தர்ம சிந்தனைகளை வளர்ப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும். கருணையுள்ள சமூகத்தை கட்டியெழுப்பு அனைவரும் பாடுபட வேண்டும். எம் பாரம்பரிய பூமியை விட்டு குடும்பம் குடும்பமாக மேலை நாடுகளை நோக்கி மக்கள் செல்வதும் துயரினைத் தருகிறது. இயன்றவரை தாய் நாட்டை வளப்படுத்த, பிறந்த மண்ணை பேண இப் புதிய ஆண்டுமுதல் எமது சமூகம் முனைய வேண்டும் என அனைவரும் பிரார்த்தியுங்கள்.

- கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி.

# நன்மை தரும் நல்லாண்டாய் உதி

புத்தாயிரத்திலேனுமிப் புவிக் கமைதி கிடைக்குமென
நப்பாசை கொண்டு நாமேமாந்தோம் – தித்திக்கும்
புத்தாயிரத் தோராண்டே புழுவாய்த் துடிப்பவர்க்கு
தப்பாமல் நல்லமைதி தா

அமைதிப் புறாவதன் அரவந்தான் கேட்கிறது
சுமைமிகுந்த நெஞ்சினர்முன் தோன்றுதில்லை – எமைஎய்க்கும்
ஆட்சியி லுள்ளோர்க்கு அமைதி விதைதன்னை
சூட்சுமமாக நீ தூவு

தூவுவாய் என்றே துடிப்புடனே காத்திருக்கும்
பாவிகளுக் கேமாற்றந் தந்திடாது – ஆவலாய்
உன்வரவைப் பார்த்து உயிர்வாழத் தவிப்பவர்க்கு
நன்மைதரும் நல்லாண்டா யுதி

*-கவிமணி க.ஆனந்தராசா.*

# புதிய தீர்வைத் தா!

விடிவு கண்டு தமிழரினம் வாழவே
வெற்றி பெற்று தமிழ் மண்ணை ஆளவே
முடிவு வைத்து பேச்சையிங்கு தொடங்கவே
முதல் போர் நிறுத்தம் தந்தவள் போகிறாள்
அடிமை வாழ்வை தமிழ்நிலத்தில் அகற்றவே
அவனி யெங்கும் ஷெல்லடியை நிறுத்தவே
உரிமையான தீர்வையிங்கு தமிழருக்கு தந்திட
உகந்த இரண்டாயிரத்தொன்று வருகிறாள்

தாமதங்கள் சொல்ல வேண்டாம் தமிழருக்கு
தாய் நிலத்தில் பட்டதுயர் போதுமிங்கு
வாமகளே! புதியவளே வரவேற்றோம் உன்னையிங்கு
வரலாற்றில் மலரும் புதுயுகத்தின் கதை எழுது
தேமதுரத் தமிழோங்க தேசமிங்கு விடிவுபெற
தென்னவுரை வரவழைக்க தூது சொல்ல
மாதவமாய் உதித்த மைந்தனவன் மாண்போங்க
மாற்ற மொன்றோடு புதியவளே நீ வருக!

*- மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்.*

# நிலை அமைதி தந்திடுவாய்

நாற்றிசையும் வெடி. முழக்கம்
நாதியற்று அலைகின்றோம்
பிறக்கின்ற புத்தாண்டே
புதுப்பொலிவு தந்திடுவாய்

சொந்த இடம் விட்டு நாங்கள்
தொலை தூரம் ஓடுகின்றோம்
தொலைந்து போன உறவுகளை
புதை குழியில் தேடுகின்றோம்
பிறக்கின்ற புத்தாண்டே.
புதுப்பொலிவு தந்திடுவாய்

அமைதி வரும் நாளை என்று
உறுதியாக இருக்கின்றோம்
பட்ட துன்ப துயரமெல்லாம்
நீங்க வரம் வேண்டுகின்றோம்
பிறக்கின்ற புத்தாண்டே
நிலை அமைதி தந்திடுவாய்.

*- இ.அ.அமலரட்ணம்.*

# நிரந்தர அரசியல் அமைதி புத்தாண்டில் நிலைக்கட்டும்!

## அமைச்சர் தேவானந்தா செய்தி

யாழ்ப்பாணம்,ஜன.1

இதுவரைகால யுத்த அனர்த்தங்களில் இருந்து விடுபட்டு நிரந்தர அரசியல் அமைதியும் சமாதானமும் இனிவரும் நாள்களில் எமது மண்ணில் நிலைத்திட மலர்கின்ற இனிய புத்தாண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகமும், வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த புத்தாண்டுச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தி வருமாறு :-

எதிர்காலம் எதிர்பார்ப்புகள் நிறைந்தவையாக எம் முன்னே விரிந்து கிடக்கின்றது. நிகழ்காலத்தின் நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி நிம்மதியான வாழ்வுக்கு அடித்தளமாட மலருகின்ற புத்தாண்டில் நாம் யாவரும் உறுதியுடன் கரங்களை இணைத்துக்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

எமது மக்களின் சிதைந்து போன வாழ்வை மீட்டெடுக்க வேண்டிய பாரிய கடமை எம்முன்னே விரிந்து கிடக்கின்றது. அழிவின் விளிம்பில் நின்று அல்லல்படும் தேசத்தையும் உடைந்துபோயிருக்கும் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தையும் நொருங்கிப் போயிருக்கும் எமது மக்களின் இனிய வாழ்வையும் மீளக் கட்டியெழுப்பவும் திடசங்கற்பம் பூணடுள்ளோம். இந்தப்பாரிய பொறுப்புக்களை எமது தோள்களில் சுமந்தவாறே மலர்ந்துள்ள புத்தாண்டில் காலடி எடுத்து வைக்கின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் நீண்டகால அரசியலுரிமைப் பிரச்சினைக்கும் அதன் விளைவாக இன்றுவரை தொடர்கின்ற யுத்தத்திற்கும் அவல வாழ்வுக்கும் முடிவு கட்ட வெகுவிரைவில் நிரந்தரமான கௌரவமான அரசியல் தீர்வுக்கு இத்தீவில் வாழ்கின்ற அனைத்துச் சக்திகளும் கரம் கோர்த்துச் செயற்பட வேண்டும்.

சமாதான சக வாழ்வை நிலைநாட்டுவது, சமாதானம்-ஜனநாயகம்-சமூக முன்னேற்றம் எனும் இலக்கை எட்டுவதுடன் ஆயுதங்களின் அச்சுறுத்தல் அகன்று அமைதியான வாழ்வு அனைவருக்கும் கிட்டச் செய்யவும் அகதிகளாக அலையும் அவல வாழ்வுக்கு முடிவுகட்டி இயல்பு வாழ்வை மீள் கட்டியெழுப்பிடவும் உறுதியான செயற்பாடுகளை முன்னெடுக்கவும் இப்புதிய வருடம் குறித்து நிற்கட்டும். மொத்தத்தில் பிறந்துள்ள 2001ஆம் ஆண்டு புதிய யுகத்தின் ஆரம்பமாக இந்நாட்டு மக்களுக்கு அமையட்டும்- என்று உள்ளது. (ஐ)

# ஆபாசப் படங்கள் தொடர்பாக திரை அரங்குகளுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.1

திரை அரங்குகளில் ஆபாசப் படங்கள் காண்பிக்கப்படுவதைக் கண்டித்து துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

'தமிழீழ சீர்திருத்த ஆர்வலர்கள்' என்ற பெயரில் பல இடங்களிலும் விநியோகிக்கப்பட்டுள்ள இந்தத் துண்டுப்பிரசுரத்தில் நீலப்படங்களையோ, நீலச்சாயல் உள்ள படங்களையோ காண்பிக்கும் திரை அரங்குகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் சிவகுருநாதர் வீதிப் பகுதியில் அமைந்திருந்த மினி சினிமா திரை அரங்கு நேற்று முன்தினம் இரவு மர்மமான முறையில் தீக்கிரையானது தெரிந்ததே. இச் சம்பவம் இறுதி எச்சரிக்கை என்று அந்தத் துண்டுபிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மினி சினிமா அரங்கு தீக்கிரையாக்கப்பட்ட பகுதியிலும் இந்தப் பிரசுரங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மழை பெய்தவேளை கைவரிசை

# உடுவில் - மருதனார்மடம் வீதியில் ஒரே இரவில் 5 கடைகளில் திருட்டு!

வலிகாமம் தெற்கு,ஜன.1

மருதனார்மடம்-உடுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள ஐந்து கடைகள் கடந்த புதன்கிழமை இரவு உடைக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை பெய்த மழையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

உடுவில் மருதனார் மடம் வீதியில் உடுவில் மகளிர் கல்லூரிக்கு எதிர்ப்புறமாக உள்ள பலசரக்குக் கடை, தையல்கடை, அலங்காரப் பொருள்கள் விற்பனைக் கடை, புத்தகக்கடை, தேநீர்க்கடை ஆகியனவே ஒரே இரவில் உடைக்கப்பட்டுள்ளன.

கடைகளின் கதவுகளுக்கு முன்பாக போடப்பட்டிருந்த கம்பிக்கிறாதியை வெட்டி உட்புகுந்து கதவுகளை உடைத்தும் -

கூரைகளைப் பிரித்து உள்ளிறங்கியும் திருடர்கள் பொருள்களைத் திருடி உள்ளனர்.

தேநீர்க் கடையில் இருந்த கேக் மற்றும் உணவுப் பொருள்களை இவர்கள் உண்டு மகிழ்ந்துள்ளனர்.

கிறிஸ்மஸ், புதுவருடக் கொண்டாட்டங்களுக்காக தைக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த பல உடுப்பு வகைகளும் தைக்கப்படாதிருந்த துணி வகைகளும் எடுத்துச் செல்லப்பட்டன. பலசரக்குக்கடை மற்றும் அலங்காரப் பொருள்கள் கடைகளில் இருந்தும் பல ஆயிரக்கணக்கான பொருள்கள் திருட்டுப்போயுள்ளன.

தேநீர்க் கடையில் வைக்கப்பட்டிருந்த விலை மதிப்புள்ள வானொலிப் பெட்டியும் களவாடப்பட்டுள்ளது.

மேற்படி திருட்டுக்கள் சம்பந்தமாக கடை உரிமையாளர்களால் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதான வீதியில் ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ள வேளையில் இராணுவ முகாம் அருகே உள்ள நிலையில் இவ்வாறு துணிகரத் திருட்டு நடைபெற்றிருப்பதையிட்டு பொதுமக்கள் ஆச்சரியமடைந்துள்ளனர். (ஐ-152)

# சாவகச்சேரி வங்கிக்கிளை புதிய இடத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.1

சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கிக்கிளை இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஸ்ரான்லி வீதியில் உள்ள புஷ்பா கட்டடத்தில் இயங்க உள்ளது.

யுத்த அனர்த்தத்தால் சாவகச்சேரியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்.தேசிய சேமிப்பு வங்கிக் கட்டடத்தில் இயங்கி வந்த இந்தக் கிளை புதுவருட தினம் முதல் புதிய இக்கட்டடத்தில் இயங்கும் என்று சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஒ-6)

# நாவலர் ஆச்சிரமத்தில் முன்பள்ளி

வலி.தெற்கு,ஜன.1

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரின் வழிநடத்தலின் கீழ் பாலர் முன்பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது.

யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இந்த முன்பள்ளி இயங்கும்.

வகுப்புக்கள் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

சிறுவர்களுக்கான பூங்கா, ஊஞ்சல், ராட்டினம், சறுக்கல் ஏணி போன்ற பல விளையாட்டு உபகரணங்களுடன், பயிற்சி அளிக்கப்பட்ட ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் ஆரம்பிக்கப்பட உள்ள இப்பாடசாலையில் சேர்ந்து கொள்ள உள்ள பிள்ளைகளின் விண்ணப்பங்கள் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து ஏற்றுக் கொள்ளப்படும் என அதன் செயலாளர் அறிவித்துள்ளனர். (ஐ-152)

## கடந்த ஆண்டுக்கான

# காணி உறுதிப் பதிவுகள் பூர்த்தியானதாக அறிவிப்பு

யாழ்ப்பாண காணிப் பதிவகத்திலும் மாவட்டப் பதிவகத்திலும் கடந்த வருடம் பெறப்பட்ட உறுதிப் பதிவு விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாக மாவட்ட மேலதிகப் பதிவாளர் என்.சதாசிவ ஐயர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு விண்ணப்பங்கள் தொடர்பாக கடந்த ஆண்டில் பெறப்பட்ட சகல விண்ணப்பங்களுக்கும் உரிய பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பெரும் தொகையான விண்ணப்பங்களைக் கையாளும் பொழுது, சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆதலினால் தமது விண்ணப்பங்களுக்குப் பதில் கிடைக்காதவர்கள் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்.மேலதிக மாவட்டப் பதிவாளர், மேலதிக உதவிப் பணிப்பாளர் நாயகமாகவும் செயற்படுவதால் ஆயிரத்து 397 காலங் கடந்த பிறப்பு இறப்புப் பதிவுகளையும், 429 அற்றோனித் தத்துவங்களையும் மக்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-5)

# ஆய்வு முறையியல் கருத்தரங்கு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க தூய விஞ்ஞானப் பிரிவினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆய்வு முறையியல் கருத்தரங்குத் தொடர் பேராசிரியர் பாலசுப்பிரமணியத்தின் 'ஆய்வின் அறிமுகம்' என்ற தொனிப் பொருளோடு கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கருத்தரங்குத் தொடரில் நாளை மறுதினம் புதன்கிழமை பேராசிரியர் கணேசலிங்கம் 'ஆய்வை மேற்கொள்வது எப்படி?' என்ற விடயம் பற்றி கருத்துரைகளை வழங்குவார்.

முதலாவது விரிவுரைக்கு வருகை தராதோர் ஆர்வம் இருப்பின் இரண்டாம் கருத்தரங்கிலிருந்து பங்கு கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்த விரும்புவோர் தங்கள் பதிவுகளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் மூன்று மணிவரை தாவரவியல் துறையில் மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இசை ஒலி நாடாக்கள்

யாழ்.பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர்

**ஸ்ரீ. தர்ஷனனின்**

*அம்மன் கவசம், தமிழிசைப் பாடல்கள் I,II*



பூபாலசிங்கம் பு.சா., யாழ்.துர்க்கா ஸ்ரே.சுன்னாகம். (82361)





வாடிக்கையாளர்களுக்கு
அபீஸ் கோப்பியின்
புதுவருட வாழ்த்துக்கள்!

**அபீஸ்** வந்தால் உங்கள் வீடே கமகமக்கும்
உங்கள் விருந்தினரை உபசரிக்க
அபீஸ் கோப்பி, தேயிலை, அபீஸ் மல்லித்தூள்,
மிக்ஷர், அபீஸ் தேன், பேரீச்சம்பழம்
இன்னும் பல.

* *வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.*

**அபீஸ் கோப்பி சென்றர்**

58A, K.K.S. வீதி,
(சத்திரத்துச் சந்தி) யாழ்ப்பாணம்.

* அபீஸ் கோப்பி வெற்றுப் பைக்கற்றுக்களை சேகரியுங்கள்! பரிசில்களை வெல்லுங்கள்!! (82272)


## பாடநூல்கள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன 1

வலிகாமம் கல்வி வலயத்துக் குட்பட்ட பாடசாலைகளுக்கான இலவச பாடநூல் விநியோகம் நாளையும் நாளை மறுதினமும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெற உள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

நாளை காலை 9 மணி முதல் 12 மணிவரை சண்டிலிப்பாய்க் கோட்ட பாடசாலைகளுக்கும் பிற்பகல் ஒரு மணி முதல் 4 மணிவரை உடுவில் கோட்ட பாடசாலைகளுக்கும் -

நாளை மறுதினமும் காலை 9 மணி முதல் 12 மணி வரை சங்கானை கோட்டப் பாடசாலைகளுக்கும்-

பிற்பகல் 1 மணிமுதல் 4 மணி வரை தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளுக்கும் -

பாடநூல்கள் விநியோகிக்கப் பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## புலிகளுக்கு ஆயுதம்

கொழும்பு,ஜன.1

விடுதலைப் புலிகள் அமைப்பு நவீன ஆயுதங்களையும் அதிவேக டோறாப் படகுகளையும் தென் ஆபிரிக்காவிலிருந்து கொள்வனவு செய்திருப்பதாக சர்வதேச புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்திருப்பதாக கொழும்பு இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கொள்வனவு தொடர்பாக ஆறு மாதங்களுக்கு முன்னர் தாய்லாந்தில் பேச்சு நடைபெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)


**நியூ விமாசி**

ஸ்கொட்டிங் பான்,
4X4 சுவர் மாபிள்கள்
6X6 சுவர் மாபிள்கள்
12X12 நில மாபிள் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

*நியூ விமாசி*
**27/3,** *மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.* (82244)



## மகாஜன சமூகம் வாழ்த்துகிறது



15-07-1967 முதல் ஆசிரியப் பணியில் இணைந்து
01-01-1976 முதல் மகாஜனக் கல்லூரியில்
சேவையை ஆரம்பித்து, இன்று இருபத்தைந்து
வருடங்களை நிறைவு செய்யும்
எங்கள் ஆசிரியப் பெருந்தகை

**திரு. நடராசா காளிதாசன்**
அவர்கள்

விஞ்ஞான ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், விளையாட்டுத்துறைச் செயலராகவும், சதுரங்கம், பரீட்சை என்பவற்றிற்குப் பொறுப்பாசிரியராகவும், ஆசிரியர்களுக்கு ஓர் ஆலோசகராகவும் விளங்கி, கல்லூரியை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்பவரும், எல்லோராலும் 'காளி' என்று அன்பாக அழைக்கப்படுபவருமாகிய எங்கள் நல்லாசானை மகாஜன சமூகம் நன்றியுடன் வாழ்த்துகிறது.

அவர்தம் சேவை மேலும் சிறக்கவும், குடும்பம் தழைத்தோங்கவும் எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை வேண்டுகிறோம்.

*.மகாஜன சமூகம்.*

யா/மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை. (82129)




## மிலேனியம் ரெஸ்ரோறன்ஸ்

### முதலாவது ஆண்டு நிறைவும் புத்தாண்டு வாழ்த்துக்களும்

*கடந்து விட்ட மிலேனியம் ஆண்டு கணக்கற்றோர் நெஞ்சத்தில் நிறைந்து விட்டது. காரணம் என்ன?*

நந்தவனத்திலே அமர்ந்தவர்கள் சிந்தை மகிழ்ந்து யாழ்.நகரில் இப்படி ஒரு பிரமாண்டமான இடமா? சிங்கப்பூரில் இருப்பது போன்றல்லவா தோன்றுகின்றது? என மகிழவைக்கும் சூழ்நிலையை உருவாக்குவது

**மிலேனியம் ரெஸ்ரோறன்ஸ்**



நந்தவனத்தின் நடுவே உங்கள் கொண்டாட்ட விருந்துபசாரம் குதூகலிக்க சமையற் கலையின் ஆசான்களின் கைவண்ணத்தில்

✪ B *புரியாணி* ✪ F *ரைட்றைஸ்* ✪ *நூடில்ஸ்* ✪ *சகல சூப் வகைகள்* ✪ *மட்டன் டெவல்* ✪ *சிக்கன் டெவல் அனைத்திற்கும்*

**மிலேனியம் ரெஸ்ரோறன்ஸ்**

உரிமையாளர்:- S.சுகுமாரன்

பண்டிகை நெருங்குவதால் ஓடர்களை முன் கூட்டியே பதிவு செய்யுங்கள்

இல.76/60, இராமநாதன் வீதி, (பல்கலைக்கழக வீதி)
கலட்டி, யாழ்ப்பாணம். (82018)

**அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

மக்கள் சேவையில் மகத்தான பத்தாண்டுகள்

**யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**

**உதவும் கரங்கள்**

வறுமை கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவச் செல்வங்களின் கல்வி முன்னேற்றம் கருதி "உதவும் கரங்கள்" அமைப்பின் கீழ் இலவச பாடசாலை பொருள்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கு விண்ணப்பிப்போர் தாங்கள் படிக்கும் வகுப்பை குறிப்பிட்டு பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியரின் சிபார்சுடனும் அவரவர் வதிவிடங்களுக்கு அண்மையிலுள்ள எமது சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் பேக்கரி உரிமையாளர் ஒருவரின் சிபார்சுடனும் 10-01-2001 புதன்கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களை எமக்கு அனுப்பி வைக்கவும்.

குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தயவு செய்து பாடசாலைகள், கல்வி நிறுவனங்களின் ஊடாக மொத்தமாக விண்ணப்பிக்க வேண்டாம்.

இடம் பெயர்ந்த சகல அங்கத்தவர்களும் ஒவ்வொரு மாதமும் 01.10 திகதிக்குள் தலைமைச் செயலகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**நிர்வாகம்.**
**யா.மா.பே.உ.ச.**

*317, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/14563)

# நான்காம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 19 - 04 - 1977

உதிர்வு 30 - 12 - 1996

**செல்வன் அருணாசலம் சிவச்செல்வன் (சிவா)**

எழுதெழுதென்றே யெழுதும் பிரம்மன் ஏனோ
இப்படியும் எழுதி வைத்துத்
தொலைத்து விட்டான்
பழுதறியாப் பண்புடைய மகனே! உன்னைப்
பறித்தெடுக்க ஏனாசைப்பட்டான் ஐயா!
வழுவதனைச் செய்து விட்டான் எமனும் சேர்த்து
வாடியழுதுருக்குலைந்து மாளுகின்றோம்.
தொழுமவன் காலன் காலில் நாமும் வந்து
சேரும் வரை நம் துயரம் ஆறாதையா!

*காளி கோயில் வீதி,*
*கொடிகாமம்.*
**T.P.070-212747**

**-குடும்பத்தினர்.**

(82240)

# நன்றி நவிலலும் 41 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 07 - 09 - 1974

மறைவு 23 - 11 - 2000

**அமரர்**

**செல்வச்சிவம் செல்வகுமார்**

(G.A.Q 2 ஆம் வருட மாணவரும், ஆங்கில ஆசிரியரும்)

எமது அன்புச் செல்வத்தின் பிரிவுச் செய்தி கேட்டு எமது துயரில் பங்கு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நாளை (02-01-2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஆலடி ஒழுங்கை,*
*வல்வெட்டித்துறை.*

**தி.செல்வச்சிவம்**
**குடும்பத்தினர்.**

(82264)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.1

அளவெட்டி வடக்கு - சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பாடசாலை அதிபர் அ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில் பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (ஒ-6)

## கனகரத்தினம் ம.வித்தியாலயம் சொந்த இடத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.1

யுத்த அனர்த்தத்தால் இடம் பெயர்ந்த யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் மீண்டும் சொந்த இடத்தில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் இயங்க உள்ளது.

இதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்காக நாளை அனைத்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாடசாலைக்குத் தவறாது சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை-

இந்தப் பாடசாலைக்கு ஆறாந்தர அனுமதிக்கு விண்ணப்பித்த மாணவர்களை எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை விடுகைப் பத்திரம், பிறப்புச்சான்றிதழ் மற்றும் வசதிகள் சேவைக்கட்டணம் ரூபா 60 ஆகியவற்றுடன் பாடசாலைக்கு வருமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஒ-6)

## திருப்பலி ஒப்புக் கொடுத்தல்

யாழ்ப்பாணம்,ஜன.1

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் புதுவருடத்தையொட்டி இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு புதுவருடத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் என்று பங்குத் தந்தை அறிவித்துள்ளார்.

இடம்பெயர்வுகளின் பின்னர் இதுவரை இந்த ஆலயத்தில் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் மக்கள் தமது தனிப்பட்ட வழிபாடுகளை செய்வதற்கு மட்டும் படையினரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை-

வருடத்தின் முதலாவது செவ்வாய்க்கிழமை 2ஆம் திகதியும் இந்த ஆலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பங்குத் தந்தை அறிவித்துள்ளார்.

## மானிப்பாயில் கணனி அறை திறப்புவிழா

வலி.தெற்கு,ஜன.1

மானிப்பாய் - வலி.தென்மேற்குப் பிரதேச் சபை அலுவலகத்தில் கணனி செயற்பாட்டறைத் திறப்புவிழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

மானிப்பாய் ஈ.பி.டி.பி அமைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு செயற்பாட்டறையைத் திறந்து வைப்பார் என்று பிரதேச சபைச் செயலாளர் பி.விக்டர் தெரிவித்தார். (ஒ-185)

## சங்கக்கிளை திறப்பு

அரியாலை,ஜன.1

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் குருநகர் மவுண்கார்மல் வீதியில் 31ஆம் இலக்கக் கிளையை மீண்டும் திறந்து வைத்துள்ளது.

இந்தப் பகுதியில் மக்கள் மீண்டும் குடியமர்ந்துள்ளதை அடுத்தே திறக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## விஞ்ஞானபீட மாணவருக்கு கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் அனைவருக்குமான கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கனகசபாபதி மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் சகல மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு விஞ்ஞான பீடாதிபதி கேட்டுள்ளார். (ஒ-6)


ஸ்கைவேயின் அன்பு நெஞ்சங்களுக்கு
**இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்**
**(2001)**

**ஸ்கைவே எலெக்ரோனிக்ஸ்**
கல்வியங்காடு

**SKYWAY ELECTRONICS**
KALVIYANKADU

தரமான நியாயமான நிரந்தர சேவைகளின் தாயகம்.
ரீ.வி. டெக், ரேடியோ, ரெலிபோன் மற்றும் மின்சார உபகரணங்கள் விற்பனையும் பழுதுபார்த்தலும்.

உரிமையாளர்:- **P.செல்லையா**
(சீடில்ஸ்)

(82132)


# மூன்றாம் ஆண்டினில் நெஞ்சம் சுமக்கும் நினைவலைகள்



மலர்வு 13 - 05 - 1934

மறைவு 01 - 01 - 1998

**அமரர் பொன்னையா நாகராசா**

திதி 28-12-2000

காலங்கள் நகர்ந்தாலும்
உங்கள் ஞாபகங்கள் நகர்வதில்லை
கண்ணை இமை காப்பது போல்
எமைக் காத்து
அன்பு காட்டி ஆதரித்தீர்
உம் அன்பு நெஞ்சம் மறப்போமா?

*சங்கம் வீதி,*
*நுணாவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*

உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்:
**குடும்பத்தினர்.**

(82161)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



பிறப்பு 11 - 06 - 1934

இறப்பு 02 - 12 - 2000

**அமரர் செல்லர் குமார்**

02-12-2000 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் செல்லர் குமார் அவர்களின் இறுதிக்கிரியைகளிலும், அஞ்சலி நிகழ்வுகளிலும் கலந்து கொண்டும் மற்றும் எமக்கு அனுதாபம் கூறியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (01-01-2001) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*ஆதியாமலை,*
*உடுப்பிட்டி.*

(82177)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நஷனல் **N.V 7500** டெக், பிரமிட் பொக்ஸ், அம்பிலிபயர் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். **T.P. 2863, 3327.** (82297)

நல்ல நிலையிலுள்ள **DOUBLE READS HARMONIUM** (ஆர்மோனியம்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **S.** அமலன், **18/2,** கோயில் ஒழுங்கை, நாவாந்துறை, யாழ்ப்பாணம். (82283)

## மணமகள் தேவை

66ஆம் ஆண்டு பிறந்த, சுவிஸ் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற, செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. மணமகன் இலங்கை வந்து திருமணம் செய்து மணமகளை அழைத்துச் செல்லக் கூடியவர். தொடர்பு: விளம்பர இல.1166,மே/பா உதயன். (82316)

இந்து கௌரவக் குடும்பத்தைச் சேர்ந்த 38 வயது நிரம்பிய லண்டனில் **Accountant** ஆக தொழில் புரிபவருக்குப் படித்த, அழகிய, உயரமான, நற்பண்புள்ள மணமகளை சகோதரர்கள் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: த.சுந்தரலிங்கம், 193, அபூபக்கர் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். **T.P.2894,** த.துரைசிங்கம், **T.P.01-556551** (82376)

## மணமகன்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 34 வயது, ஆயிலியம் 4ஆம் பாதம், செவ்வாய்க்குற்றமுள்ள, **B.Sc (Agriculture)** மணமகளுக்கும்,37வயதுடைய கேட்டை 2ஆம் பாதம், செவ்வாய்க்குற்றமற்ற பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணிபுரியும் மணமகளுக்கும் பண்பான தொழில் புரியும் மணமகன்களை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்பு மற்றும் விவரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.1167, மே/பா உதயன். (82318)

## இறைச்சிக் கோழி

கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (82319)

சேவல், கல்பேட் தினமும் இலவசமாகச் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.லெக்பேட்ஸ் (பச்சை, நீலம்) விற்பனைக்குண்டு. 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் அளவு). (81827)

இறைச்சிக் கோழி (கல்பேட்ஸ்) விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (82350)

இறைச்சிக்கு உகந்த சேவல், கல்பேட் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: **B.**அல்போன்ஸ் சிங்கம், 35, கோயில் வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (82334)

## புறொயிலர் குஞ்சுகள்

3 நாள்கள் வளர்ந்த **SAMEERA** பெரிய இன புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விலை **65/-** மட்டும். 3ஆம் நாள் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் விலை **75/-** மட்டும். வை.சிவகுமார் 461, நாவலர் வீதி & 123 (கிளீன் சொட் அருகில்) பஸ்நிலையம், யாழ்நகர். (82392)

## வகுப்புக்கள்

தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கில தட்டெழுத்து வகுப்புக்கள் புதிய பிரிவு 03-01-2001 ஆரம்பம். தொடர்பு: 5, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (82354)

வானொலி திருத்துதல். திரு. ஆர்.ஜி.கிருபாகரன், கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை. **T.P.021-2525** (82319)

## தவறிவிட்டது

குடத்தனை வடக்கு, குடத்தனை எனும் முகவரியைக் கொண்ட தவனேஸ்வரி என்பவருடைய தே.அ. அட்டை(இல.747431051**V**), விசேட அ.அட்டை(091102812) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கிறிஸ்டர் தொலைத்தொடர்பகம், குடத்தனை எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (82357)

மாதகல் கிழக்கு, மாதகல் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வி விமலாதேவி சுந்தரலிங்கம் என்பவரது தேசிய.அ.அட்டை (718372810**V**) விசேட.அ.அட்டை (0905017824) தொழில்.அ.அட்டை **[SriLanka Telecom]** என்பன 28-12-2000 அன்று பெருமாள் கோயிலுக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு முன்பாக உள்ள உபதபால் கந்தோரில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (82382)

## ஆங்கிலம் விசேடமாக

**O/L, A/L,** ஆண்டு **8-10, G.A.Q** அடிப்படை அறிவிலிருந்து துரிதமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர்: **B.Sc.(Cey) London Inter.** 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் பின்புறம்) திருநெல்வேலி. (82277)

## இலக்கியக் கட்டுரைகள்

க.பொ.த. சாதாரண/உயர்தர மாணவர்கள் தமிழ் மொழியும், தமிழ் இலக்கியமும் கற்பதற்கு உதவக் கூடிய 38 கட்டுரைகள், 325 நாடகங்களும், 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் இலக்கிய விமர்சன நூல். (81537)

## இசை வகுப்புக்கள்

ஓகன், கிற்றார், தபேலா, நடனம், வாய்ப்பாட்டு வகுப்புக்கள் வழமை போல் நடைபெறுகின்றன. புதிய பிரிவு ஆரம்பம்: 06.01.2001 மாலை 2.00-5.00 கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் முன்பாக **(C/14585)**

---

நாளை ஆரம்பம்!

பிரத்தியேக வகுப்பு

**A/L 2001 DAY CLASS**

மதியம் 1.00 மணி

கணக்கீடு **D.SAM**

**(76/2 Temple Rd, Jaffna)** (82388)

---

*அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்*

**அங்கிலீன் ரெக்ஸ்ரைல்ஸ்**

55, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

*கிளை:* 48, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (82395)

---

**திரீஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் சுற்றுப் போட்டிகள்**

கரம் ~ மேசைப் பந்தாட்டம்

விண்ணப்பப் படிவங்களை 05.01.2001க்கு முன்னர் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள திரீஸ்ரார் விளையாட்டுக் கழகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

*ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்.* **திரீஸ்ரார் விளையாட்டுக் கழகம்.** (82397)

---

*வெளிவந்துவிட்டது!*

**சர்வதேச வர்த்தகம்**

**பொருளியல் நூல்**

**(புதிய புள்ளிவிவரங்களுடன்)**

ஆசிரியர்: **வே. கருணாகரன்.** (82374)

---

**IIS இன் புதுவருட வாழ்த்துக்கள்**

மலரும் இப் புத்தாயிரமாண்டில் தமிழினத்தின் துன்பங்கள் நீங்கி வாழ்வில் சுபீட்சமும்,அமைதியும் நிலவ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு எமது அன்புக்குரிய மாணவர்கள், நண்பர்கள் நலன் விரும்பிகள் , வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றோம்.

**'IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி'**

இயக்குநர், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள். **IIS.**

*100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.* (சி14581)

---

**சிதம்பரக் கல்லூரி**

வல்வெட்டித்துறை

**இலவசமாக கற்பித்தல் உபகரணங்கள் வழங்கும் வைபவம்**

**நாள் :** 03-01-2001 புதன்கிழமை

**நேரம் :** பிற்பகல் 1.00 மணி

**இடம் :** *கல்லூரி மண்டபம்*

தலைவர் :

**திரு. செ.யோகச்சந்திரன்** *(கல்லூரி அதிபர்)*

பிரதம விருந்தினர்:

**திரு.சி.புஸ்பலிங்கம்**

*(கோட்டக் கல்வி அதிகாரி, பருத்தித்துறை)*

சிதம்பரக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினரின் அனுசரணையுடன், இக் கல்லூரியில் கல்வி பயில்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாகக் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கும் இவ் வைபவத்தில் சிதம்பரக் கல்லூரி நலன்விரும்பிகளையும் பெற்றோர்களையும் கலந்து சிறப்பித்து மாணவர்களை ஊக்குவிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிதம்பரக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.

*வல்வெட்டித்துறை.* (82326)

---

*அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.*

கவுண், புடைவைகள், துணிகள், சேட்டிங், சூட்டிங் மற்றும் பலவகையான துணி வகைகள் வாங்கிக் கொள்ள நாடுங்கள்

**லைடன் புடைவை நிலையம்**

(பஸ்நிலையம் முன்பாக)
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**குறிப்பு:** வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க 01.01.2001 - 15.1.2001 பொங்கல் வரையும் **மலிவு விற்பனை** நீடிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம். (C/14579)

---

**மங்களகரமான திறப்பு விழா**

இல. 58, குகன் வீதி அரியாலையில் நவீன வசதிகளுடன் உங்களின் திருப்தியே எங்களின் சேவையென இயங்கிவந்த **'மேகாஸ்'** வீடியோ ஸ்தாபனத்தார் நவீன வசதிகளுடன் கூடிய வீடியோ, ஓடியோ, மிக்சிங் ஸ்ருடியோ வசதிகளுடன் புதுப் பொலிவோடு 'இல. 23, மானிப்பாய் வீதியில்' கோலாகலமாக இன்று காலை 8.00-9.00 மணிவரையுள்ள சுபவேளையில் ஆரம்பித்து வைக்கின்றனர். சிறந்த வெளிப்புறப் படப்பிடிப்பிற்கும், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சிறந்த வீடியோ, ஓடியோ ஒளி, ஒலிப் பதிவுகட்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்:

**மேகாஸ் வீடியோ**

**MEHAS VIDEO**

*தலைமை*
இல. 23, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

*கிளை*
இல. 56, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்சந்தி, கொக்குவில்.

(82385)

# கண்ணீர்ப் பூக்கள்

## பொன்னையா கமலரூபன்

(விரிவுரையாளர், தமிழ்த்துறை
யாழ். பல்கலைக்கழகம்)

எமது சக விரிவுரையாளர் கமலரூபன் அவர்களின் பிரிவால் துயருறும் மனைவி மற்றும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**விரிவுரையாளர்கள், தமிழ்த்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(82393)

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் விக்னேஸ்வரன் அரவிந்தன்

அரியாலை A. V. றோட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட விக்னேஸ்வரன் அரவிந்தன் 29-12-2000 வெள்ளிக்கிழமை கார் விபத்தில் கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் விக்னேஸ்வரன்—யோகேஸ்வரி (கந்தானை) தம்பதிகளின் அன்புப் புதல்வனும், லாவன்யாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குமாரத்தியானன், யோகராசா, காலஞ்சென்ற நடராசா, சந்திரகுமார் (ஜேர்மனி), குமார் (கனடா), தில்லைராசன் (கனடா) ஆகியோரின் மருமகனும் திருமதி நவஜோதி தியாகலிங்கத்தின் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி—யோகம்மா தம்பதிகளின் அன்புப் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சறோஜினி சுந்தரலிங்கம்.**
(பெரிய தாய்)
T. P. 2894

193, அபூபக்கர் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
(82375)

## இராமலிங்கம் சின்னாச்சிப்பிள்ளை

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கண்மணியின் மகளும் அருணாசலம் செல்லம்மாவின் மருமகளும் ஆகிய இராமலிங்கம் சின்னாச்சிப்பிள்ளை 31-12-2000 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் சபாரத்தினம் (கொக்குவில்) கண்ணியசீலன் (புங்குடுதீவு), விநாயகமூர்த்தி (கனடா), காலஞ்சென்றவர்களான சற்குணம், கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் தாயாரும் கணேசலிங்கம், கனகாம்பிகை, செல்லம்மா, லோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் மாமியாரும், கனகம்மா (கனடா), தங்கம்மா (கனடா), காலஞ்சென்றவர்களாகிய சுப்பிரமணியம், அன்னம்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-01-2001) திங்கள் பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகப் புங்குடுதீவு மணற்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**கண்ணியசீலன் (மகன்),**
**பகீதரன் (பேரன்).**
(தபாலகம், புங்குடுதீவு)

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(82387)

## திருமதி
## செல்வமாணிக்கராசா பாலச்சந்திராவதி

அரியாலை நல்லூர் தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்வமாணிக்கராசா பாலச்சந்திராவதி (சந்திரா) நேற்று (31-12-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வமாணிக்கராசாவின் (புகையிரத கட்டடப்பகுதி ஓய்வூதியர்) அன்பு மனைவியும், விமலா (பிரான்ஸ்), லகிலா, தினேஸ்ராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தனேசனின் அன்பு மாமியும், ஸ்ரீரேபனின் பேர்த்தியும் மற்றும் காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி இரத்தினத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசா, அன்னம்மா கிருஷ்ணபிள்ளை, இராசதுரை ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற கனகரெட்ணம், நாகரெட்ணம் (இந்தியா), வேலுப்பிள்ளை, பத்மாவதி ஆகியோரின் பெறாமகளும், வரதலெட்சுமி, இந்திராணி, தெய்வேந்திரம் (இலங்கை மின்சார சபை), பத்மலோஜினி ஆகியோரின் சகோதரியும், தியாகராசா (விற்பனைத்திணைக்கள ஓய்வூதியர்), ஜெகநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சத்தியகலா, பதுமாகரன், (நோர்வே), இராசசூரியம், சரஸ்வதி, இராஜலெட்சுமி, இராசமலர், யோகநாதன், இராஜேஸ்வரி, செல்வமலர், இராசகாந்தி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று (31-12-2000) ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்து மயானத்தில் நடை பெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இ. செல்வமாணிக்கராசா**
(கணவர்)

முதலியார் லேன்,
அரியாலை, நல்லூர்.
(82398)

# துன்ப துயரங்களின் மத்தியில்
# மற்றொரு புத்தாண்டு மலர்கிறது

## மலையக மக்கள் முன்னணித் தலைவர் செய்தி

கொழும்பு, ஜன. 1

மனதில் ஏக்கங்களுடனும், வாழ்க்கையில் துன்பங்களுடனும் வழமைபோல இன்னுமொரு புத்தாண்டினை நாம் எதிர் கொள்கின்றோம் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் வெளியிட்டுள்ள புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

முதல் வருடத்தை மிஞ்சுவது போல அடுத்தடுத்த வருடங்களில் ஏற்படுகின்ற இழப்புகளினாலும், அழிவுகளினாலும் எமக்கு மிஞ்சுவதெல்லாம் வேதனைகளும், துயரங்களும்தான் என்பது வழமையாகி விட்டது.

சமாதான பேச்சுவார்த்தைகள் வேகம் பிடித்திருப்பதும், விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அறிவித்தலும் — புத்தாண்டில் இனப்பிரச்சினையில் தீர்வு ஏற்பட்டு நாட்டில் அமைதி ஏற்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் அதே வேளையில் மனிதாபிமானமற்ற இனவாதிகளினதும் சுயநலமிக்க அரசியல் வாதிகளினதும் போக்கினால் இந்த முயற்சி அனைத்தும் சீர் குலைந்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

வேகமாக உயரும் விலைவாசியும் நியாயமான சம்பள உயர்வின்மையும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வை அச்சுறுத்தலாக்கி இவர்களை தத்தளிக்க வைத்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் நிம்மதியும் அனைத்து மக்களின் வாழ்வில் அமைதியும் நிரந்தரமாக ஏற்பட வேண்டும் என்பதே மலையக மக்கள் முன்னணியின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று அவர் தனது செய்தியில் தெரிவித்துள்ளார். (ஐ)

## வலி. மேற்குப் பிரதேசத்தில் பாதீனியம் ஒழிப்பு வாரம்

வலிகாமம் மேற்கு, ஜன. 1

பாதீனியம் களை ஒழிப்பு வாரமாக இந்த வாரத்தை வலிகாமம் மேற்குப் பிரதேச விவசாய ஒருங்கிணைப்புக் குழு பிரகடனப்படுத்தியுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் குறிப்பாக வட்டுக்கோட்டை, சங்கானைப் பகுதிகளில் கூடுதலாகக் காணப்படும்பாதீனியம் களையைமுற்றாக ஒழிப்பதற்கு வாரத்தை விவசாய ஒருங்கிணைப்புக் குழு பிரகடனப்படுத்தியுள்ளது. ஜனவரி 2 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக ஊழியர்கள், பாடசாலைமாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அனைவரும் ஒன்றிணைந்து பாதீனியம்களையைமுற்றாக ஒழிப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற குழுக்கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(இ-175)

## பாடசாலை மீண்டும் ஆரம்பம்

இளவாலை, ஜன. 1

கடந்த சில காலமாக மூடப்பட்டிருந்த மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம் மீண்டும் திறக்கப்பட உள்ளது.

இது தொடர்பான நிகழ்வு இன்று திங்கள் முற்பகல் 11 மணிக்கு பாடசாலையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன்கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வு நேற்று நடைபெற இருந்ததாக நேற்றைய உதயனில் வெளியான செய்தி தவறாகும். (ஐ)

## கல்வி உபகரண உதவி

காரைநகர், ஜன. 1

வறுமைக் கோட்டின்கீழ் வாழும் பாடசாலை மாணவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்கு 2001 ஆம் ஆண்டில் உபயோகிக்கக் கூடிய கல்வி உபகரணங்களை காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை வழங்க உள்ளது.

காரைநகரில் உள்ள ஆறு பாடசாலைகளில் தரம் 1—5 வரை கல்வி கற்கும் வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் பாடசாலை மாணவர்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட உள்ளதாக வாரிவளவுநல்லியக்கச் சபைச் செயலாளர் எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

(ஐ-73)

## கூட்டுறவுப் பயிற்சிநெறி

சண்டிலிப்பாய், ஜன. 1

யாழ். மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் தராதரபபத்திர சாதாரண பிரிவினதும், உயர்தர பிரிவினதும் பயிற்சி நெறிகள் இம் மாதம் 15 ஆம் திகதியன்று ஆரம்பமாகவுள்ளன.

சாதாரண பிரிவுக்கான பயிற்சி நெறி ஐந்தரை மாதங்களும் உயர்தர பிரிவுக்கான பயிற்சிநெறி 9 மாதங்களும் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ—135)


மலரும் புத்தாண்டில் அனைவரும்
சமாதானத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ
**வாழ்த்துகின்றோம்**

**"ஒட்டோ சப்ளையர்ஸ்"**

நீரிறைக்கும் இயந்திரம், லான்ட்மாஸ்டர் உதிரிப் பாகங்கள் விற்பனையாளர்களும், சகலவிதமான இயந்திரங்களினதும் வாகனங்களினதும் கிறாங் வெட்டியும் போறிங் செய்தும் சிலீவ் இறுக்கிக் கொடுப்பவர்களும்.

T. P. 021.2047

266A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**"வீல் மூவர்ஸ்"**

தொலைத் தொடர்பு சேவை

T. P: 021-2179, 021-3234, 021-2443,
FAX: 021-2179

போட்டோப் பிரதி

642, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(கோயில் முன்பாக) (82399)


# நீங்காத நினைவுகளுடன்
# 7 ஆம் ஆண்டில்

தாயின் மடியில
26 — 08 — 1968



காலன் பிடியில்
03 — 01 — 1994

செல்வன்

## இராஜதுரை இராஜேஸ்வரன் (இதயா)

திதி: 2001-01-01

அன்புள்ளம் கொண்ட எம் இதய ஒளிவிளக்கே!
இன்சொல் பேசி வன்சொல் வாய்திறவாத உனையும்
ஈரமில்லா இதயங் கொண்ட காலனவன்
உமையழைத்தான் எமையிங்கு தனியாக்கி
அரனடியில் அமைதிபெற வேண்டுகிறோம் எந்நாளும்!

உன் பிரிவால் வாடும்:
**குடும்பத்தினர்.**

நாவற்காடு,
அச்சுவேலி.
(82400)

## நெடுமாறனுக்கு அனுமதி மறுப்பு

கோவை, ஜன. 1

சந்தன மரக்கடத்தல் காரரின் தமையனும், கோவைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள வருமான மாதையனைச் சந்திக்க தனக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக பழ நெடுமாறன் தெரிவித்தார்.

இது அப்பட்டமான உரிமை மீறல் என்றும் இதற்காக தமிழக அரசைக் கண்டிப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

பலவருடங்களாக சிறையில் உள்ள மாதையனை விடுவிக்க பழ. நெடுமாறன் சட்ட முயற்சிகளை மேற்கொள்வதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே விட்டுக்கொடுக்காத தன்மை

## அமெரிக்க அதிகாரி விசனம்

டெல்அவிவ், ஜன. 1

ஜெருசலேம் அகதிகள் தொடர்பாக பலஸ்தீன இஸ்ரேல் தரப்புகளிடையே மாறுபட்ட கருத்துகளும் விட்டுக்கொடாத தன்மையும் நிலவுவதாலேயே மேற்காசியப் பிரச்சினையில் இறுதித் தீர்வை ஏற்படுத்த முடியாதுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதிபர் பில் கிளின்ரன் இரு தரப்புகளிடமும் கையளித்த தீர்வுக்கான பரிந்துரைகள் தொடர்பாக பலஸ்தீனரும் இஸ்ரேலியரும் தத்தமது முடிவுகளைத் தெரிவிக்காததற்கு இதுவே காரணம் என்றும் தெரிவித்தார்.

1948 ஆம் ஆண்டு இஸ்ரேல் படைகள் ஜெருசலேமை ஆக்கிரமித்த போது அங்கிருந்து வெளியேறிய பலஸ்தீன அகதிகள் தொடர்பான விடயமே தற்போது தீர்வு காண்பதில் பிரதான தடையாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜெருசலேமின் ஒரு சதுர அங்குலத்தைக்கூட மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்க முடியாது. அங்கிருந்து வெளியேறிய பலஸ்தீன அகதிகள் மீண்டும் குடியமர வேண்டும் என்று யசீர் அரபாத் வலியுறுத்தியுள்ளார்

பலஸ்தீன அகதிகள் ஜெருசலேத்தில் சொந்த இடங்களில் மீண்டும் குடியேறுவதை ஒருபோதும் ஒத்துக்கொள்ள முடியாது என்று இஸ்ரேலியப் பிரதமர் எகுட்பராக் கூறியுள்ளார்.

ஜெருசலேத்தில் இஸ்ரேல் கைப்பற்றிய இடங்களில் தற்போது கணிசமான எண்ணிக்கையில் யூதர்கள் வாழ்ந்து வருகின்றனர். பலஸ்தீன அகதிகள் ஜெருசலேத்தில் மீளக் குடியேறினால் யூதர்களை விட பலஸ்தீனர்கள் பெரும்பான்மை பெறுவார்கள்.

இது தனது ஆதிக்கத்தை ஜெருசலேத்தில் முடிவுக்குக் கொண்டு வந்து விடும் என்று இஸ்ரேல் அஞ்சுவதாகக் கருதப்படுகிறது

(ஒ-6)

## எச்சரிக்கை

வாஷிங்டன் ஜன. 1

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு எதிராகச் செயற்படும் பயங்கரவாத அமைப்புக்கள் மூலம் பாகிஸ்தான் தீவிரவாத நடவடிக்கைகளை ஏவி விடுவதாகவும் அதனைத் தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும் பாகிஸ்தானை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு இலக்குவைத்திருப்பதாக தீவிரவாத அமைப்பு ஒன்று அண்மையில் எச்சரிக்கை விடுத்துள்ளதைக் கண்டித்தே வாஷிங்டன் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இப்படியான சம்பவங்கள் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்கும் நடவடிக்கையாக அமையாது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் புதிய அணுகுமுறை வேண்டும்

## பழ. நெடுமாறன் வேண்டுகோள்

சேலம், ஜன. 1

இலங்கைப் பிரச்சினையில் ராஜீவ் காந்தி எடுத்த அணுகுமுறை போலல்லாது, தற்போதைய மத்திய அரசு புதிய அணுகு முறையைக் கடைப்பிடித்து நிரந்தரத் தீர்வு ஏற்பட உதவவேண்டும்.

இவ்வாறு ஈழஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பழ. நெடுமாறன் கோரியுள்ளார்.

நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

மேலும் அவர் கூறுகையில், சென்னையில் தங்கியிருந்த தமிழீழ விடுதலை அணிப் பொதுச் செயலாளர் ஈழவேந்தன் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டது தமிழ் மக்களுக்கு விடுக்கப்பட்ட அறைகூவல் என்றும், ஈழவேந்தன் மீண்டும் தமிழகம் திரும்ப அனுமதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

முந்திய இந்திய அரசுகள் ஈழமக்களுக்கு எதிரான நிலையை எடுத்திருந்ததாகவும் பழ. நெடுமாறன் சுட்டிக் காட்டினார். (ஒ-8)

# நோர்வேத் தலைநகரில் உள்ள துருக்கித் தூதரகம் மீது தாக்குதல்

ஒஸ்லோ, ஜன. 1

நோர்வேக்கான துருக்கித் தூதரகத்தை இனம் தெரியாத சிலர் தாக்கிச் சேதப் படுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு ஒஸ்லோவில் உள்ள துருக்கித் தூதரகத்தைச் சிலர் தாக்கி ஜன்னல் கண்ணாடிகளை உடைத்தனர். அத்துடன் தூதரக் கட்டடச் சுவர்களில் துருக்கிய அரசுக்கு எதிரான வாசகங்களையும் எழுதியுள்ளனர்.

தூதரகக் காவலாளிகள் இவர்களைப் பிடிக்க முயற்சி செய்த சமயம் அவர்களைத் தாக்கிவிட்டு விஷமிகள் தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்படுகிறது.

தாக்குதலை நடத்தியவர்கள் பின்லாந்து நாட்டினர் என்று உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவித்தன.

(ஒ-6)

## இனஒழிப்புக் குற்றஞ்சாட்டப்பட்ட

# 14 மூத்த இராணுவ அதிகாரிகள் யூகோஸ்லாவியாவில் பதவிநீக்கம்

பெல்கிரேட், ஜன 1

யூகோஸ்லாவியாவில் பதின்னான்கு மூத்த இராணுவ அதிகாரிகளை அதிபர் கொஸ்டுனிகா பதவிகளில் இருந்து நீக்கியுள்ளார்

முன்னாள் அதிபர் சொலொபொடான் மிலெசெவிக்குக்கு மிகவும் நெருக்கமானவர்களாகப் பதவிவிலக்கப்பட்டவர்கள் கருதப்படுகின்றனர்.

மிலெசெவிக்கின் ஆட்சிக் காலத்தில் கொசோவாவில் நடைபெற்ற அல்பேனியர்கள் மீதான இன ஒழிப்பு நடவடிக்கைகளில் இந்தப் பதின்நான்கு அதிகாரிகளும் முக்கிய பங்கு வகித்தவர்கள் என்று கூறப்படுகிறது.

இவர்களில் 3 பேர் மீது யுத்தகாலக் குற்ற விசாரணை மன்றத்தில் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு அவர்கள் தேடப்பட்டுவரும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டிருந்தனர்.

மிலோசெவிக்கின் ஆட்சியில் இவர்கள் யூகோஸ்லாவியாவில் பாதுகாப்பாக இருந்தனர். தற்போது புதிய அதிபரால் பதவி விலக்கப்பட்டதால் இவர்கள் விசாரணை மன்றத்தால் விசாரிக்கப்பட வழிஏற்பட்டுள்ளது.

## திகார் சிறையில் கலவரம்

இந்தியாவின் புதுடில்லி திகார் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தில் ஒரு கைதி உயிரிழந்தார். அதிகாரிகள் உட்படப் பலர் காயமடைந்தனர்.

ரம்ழானை யொட்டி தொழுகை நடத்துவதில் இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதல் கலவரமாக மாறியதாக சிறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## முதல் இடம்

இந்தியாவில் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற முக்கிய சமபவங்கள் தொடர்பான செய்திகளைத் தரப்படுத்திய பி. ரி. ஐ. செய்தி நிறுவனம்' இந்திய அரசின் காஷ்மீர் தீவிரவாதிகளுடனான யுத்த நிறுத்தச் செய்திக்கு முதலிடம் வழங்கியுள்ளது.

ஜார்கண்ட், டத்திராஞ்சல் மாநிலங்கள் புதிதாக உருவாகின என்ற செய்திக்கு இரண்டாமிடத்தையும் இந்தியக் கிரிக்கட் வீரர்களின் லஞ்ச ஊழல் சம்பவங்களை டிலலி பொலீஸார் அம்பலப்படுத்திய சம்பவம் குறித்த செய்திக்கு மூன்றாம் இடத்தையும் அந்த செய்தி நிறுவனம் வழங்கியுள்ளது. (இ-8)

# ஆற்றில் கப்பல்கள் மோதியதில் 200 பேர் இறந்ததாக அச்சம்!

## பங்களாதேஷில் துயரம்

டாக்கா, ஜன. 1

பங்களாதேஷில் 2கப்பல்கள் நடு ஆற்றில் மோதி உடைந்ததில் 200 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

கான்பூர் மாவட்டத்தில் இருந்து தென்மேற்கு ஜிரோஸ்பூர் மாவட்டதுக்கு மேக்னா நதியில் சென்று கொண்டிருந்த பயணிகள் கப்பல், எதிரில் வந்த சிறிய ரகச் சரக்குக் கப்பல் ஒன்றுடன் வேகமாக நேருக்குநேர் மோதியது.

நதிப்பகுதியில், இரவு என்பதாலும் அடர்ந்த மூடுபனி இருந்தாலும் இரு கப்பல்களும் மோத நேர்ந்தது.

இதில் பயணிகள் கப்பலின் பல பகுதிகளில் உடைப்பு ஏற்பட்டு நதி நீர் உட்புகுந்ததாகவும்—

இதனால் பயணிகள் கப்பல் ஆற்றில் மூழ்கியதாகவும்— கூறப்படுகின்றது.

இரவு நேர இருட்டில் ஆற்றில் மூழ்கியவர்களை காப்பாற்றுவது சிரமமாக இருந்ததாக உயிர் தப்பியவர்கள் கூறினர்.

பயணிகள் கப்பலில் பயணம் செய்த 400 பேரில் 200 பேர் வரை கரை சேர்ந்துள்ளனர்.

மீட்புப் பணிகளின் போது இதுவரை 78 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மற்றவர்கள் ஆற்றில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (ஒ-8)

# யூகோஸ்லாவியாவில் இருந்து மொண்டிநீக்ரோ பிரிகிறது

மொண்டிநீக்ரோ மாநில அரசு யூகோஸ்லாவியாவில் இருந்து சுதந்திரத் தனி நாடாகப் பிரிந்து செல்லத் தீர்மானித்துள்ளது.

பொஸ்னியா உட்பட மத்திய யூகோஸ்லாவிய நாடுகள் தனிநாடுகளாகப் பிரிந்து சென்றதை அடுத்து மொண்டிநீக்ரோ தனிநாடாக முயற்சித்தபோதும் முன்னாள் யூகோஸ்லாவிய அதிபர் சொலொபொடான் மிலோசெவிக் இந்தப் பிரிவினைவாதத்தை தடுக்கும் முகமாக கூடுதல் அதிகாரங்களை மொண்டிநீக்ரோவுக்கு அளித்து ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.

மொண்டிநீக்ரோ பிரிந்து சென்றால் யூகோஸ்லாவியா என்ற சமஷ்டி மாநிலங்கள் ஒருங்கிணைந்த நாடு மறைந்து— செர்பியா என்ற மாநிலம் தனி நாடாக உருவெடுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ—8)

## அமெரிக்காவில் பனிக்குளிர் அதிகரிப்பு

அமெரிககாவின் வடபகுதி மாநிலங்களை பெரும் பனிப் புயல்கள் தொடர்ந்து தாக்கி வருகின்றன. முந்தைய ஆண்டுகளைவிட தற்போதைய பருவ காலத்தில் பனிக்குளிரின் தாக்கம் மிகவும் அதிகமாக உள்ளதாகவும் சில மாதங்களின் முன்னர் அமெரிக்காவில் பேரழிவை ஏற்படுத்திய காட்டுத் தீ காலநிலையில் இந்த மாற்றத்தை ஏற்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இந்த ஆண்டு ஐரோப்பிய நாடுகளிலும் பனியின் தாக்கம் அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

## சாமி சிலைகளை சேதமாக்கிய 7 பேர் கைது

தமிழகத்தின் திருநெலவேலி மாவட்டம் மேலப்பாளையத்தில் உள்ள கோயில்களில் சாமி சிலைகள் சேதப்படுத்தப்பட்டு வந்தன.

இதனால் கோயில்களுக்கு பாதுகாப்பளித்த பொலிஸார் இது தொடர்பாகத் தமிழ்நாடு முஸ்லிம் கழகத்தின் மேலப்பாளையம் நகரச் செயலர் உட்பட 7 பேரைக் கைது செய்துள்ளனர்.

## ஆந்திராவில் கள்ளச் சாராய மரணங்கள்

ஹைதராபாத், ஜன. 1

இந்தியாவின் ஆந்திரா மாநிலம் அனந்பூர் மாவட்டத்தில் கள்ளச் சாராயம் அருந்திய 7 பேர் உயிரிழந்தனர்.

தத்தமது கிராமங்களில் இருந்து சந்தை ஒன்றில் விவசாயப் பொருள்களை விற்க வந்திருந்த விவசாயிகளே இறந்தவர்களாவர்.

இந்த மரணங்கள் தொடர்பாக விசாரணை நடத்திய மாவட்ட நிர்வாகம், சம்பவம் நடந்த பகுதியின் பொலீஸ் அத்தியட்சகர் உட்பட 11 பேரை பணிகளிலிருந்து இடை நிறுத்தியுள்ளது.

# தீவிரவாதிகளுக்கு ஆதரவு தரும் பாகிஸ்தானுக்குக் கண்டனம்

## அமெரிக்கா விடுத்தது

வாஷிங்ரன், ஜன 1

இந்தியாவுக்கு எதிராக வன்முறைநடவடிக்கைகளை மேற்கொள்ளும் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆதரவளிப்பதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கத் தேசியப் பாதுகாப்புச் சபையின் அதிபர் கிளின்ரனின் சிறப்பு உதவியாளர் குருஸ்ரீடன் அரசுசார்பில் இக்கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

டில்லி செங்கோட்டையில் தாக்குதல் நடத்திய லஸ்கர்-இ-தொய்பா மற்றும் சில தீவிரவாத அமைப்புகள் செயற்பட பாகிஸ்தான் ஆதரவு அளித்து வருவதும், லஸ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப் போவதாக அறிவித்திருப்பதும் அமெரிக்க அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதாக ரீடன் தெரிவித்தார்.

இத்தகைய தாக்குதல்களும் அச்சுறுத்தல்களும் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளுக்கு முற்றிலும் எதிராக உள்ளது என்று சுட்டிக் காட்டியுள்ள ரீடன் இந்திய அரசு அறிவித்துள்ள தாக்குதல் நிறுத்தத்தை அமெரிக்கா வரவேற்பதாகவும் கூறியுள்ளார்.

(ஒ)

# தென் ஆபிரிக்காவில் இருந்து புலிகளுக்கு ரூ. பல கோடி பெறுமதியான ஆயுதம்?

## டோறாப் படகுகளும் கிடைத்துள்ளனவாம்

கொழும்பு,ஜன.1

பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் மற்றும் டோறாப் படகுகளை விடுதலைப் புலிகள் தென் ஆபிரிக்காவிடம் இருந்து நன்கொடையாகப் பெற்றுள்ளனரா? என்பது குறித்து சர்வதேச புலனாய்வுப் பிரிவினர் புலனாய்வுகளை மேற்கொண்டுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

தென் ஆபிரிக்காவில் இருந்து விடுதலைப்புலிகள் பாரிய நவீன ஆயுதங்களையும் அதிவேக டோறாப் படகுகளையும் கொள்வனவு செய்துள்ளனர் என்றும் -

அவை இன்னமும் இலங்கைக்கு வந்து சேரவில்லை என்றும் - இராணுவ உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த ஆயுதங்களை தென் ஆபிரிக்காவிடம் இருந்து நன்கொடையாகப் புலிகள் பெற்றுள்ளனரா அல்லது குறைந்த விலைக்குக் கொள்வனவு செய் துள்ளனரா என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் -

இந்த ஆயுத பேரம் தொடர்பான பேச்சுக்கள் ஆறு மாதத்துக்கு முன்னரே தாய்லாந்தில் இடம்பெற்றுள்ளன என்றும் - அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கடலில் போர் புரிவதற்காக இந்த டோறாப் படகுகளை புலிகள் கொள்வனவு செய்துள்ளனர் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

(முன் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்) (இ-3)

## முரளிதரன் சாதனை

டேர்பன்,ஜன.1

இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ரெஸ்ட் ஆட்டங்களில் முந்நூறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்து முடிந்த தென்னாபிரிக்க அணியுடனான ரெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணித் தலைவர் ஷோன் பொலக்கின் விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் அவர் இந்த சாதனையைப் புரிந்தார்.

தனது 58 ஆவது ரெஸ்ட் போட்டியில் இந்த சாதனையைப் புரிந்துள்ள முத்தையா முரளிதரன், ரெஸ்ட் ஆட்டங்களில் 300 விக்கெட்டுக்களைச் சாய்த்த 17 ஆவது வீரர் ஆவார். (இ-8)

# யுத்த நிறுத்த அறிவிப்பு மக்களுக்கு பெரும் நிம்மதி

## சர்வ மதக்குழுத் தலைவர் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள யுத்த நிறுத்தச் செய்தியானது இலங்கை மக்களுக்குப் பெரும் நிம்மதியைக் கொடுக்கும் ஒன்றாகும்.

மேற்கண்டவாறு சர்வமதக் குழுத் தலைவர் வண.மாதம்பாகம அஸ்ஸஜி தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டியில நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமாதானப் பேரணியில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் சமாதானப் பேச்சு ஒன்றை மேற்கொள்வதற்காக தற்போது கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பத்தை அரசாங்கம் தவறவிடக்கூடாது. தனது முழுக் கவனத்தையும் செலுத்தி யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

காணாமற்போன படையினரின் பெற்றோர் சங்கத் தலைவர் ஈ.பி.நாணயக்கார பேசுகையில் இலங்கையில் நடைபெற்றுவரும் யுத்தம் காரணமாக பொருளாதார வளங்கள் மட்டுமன்றி விலைமதிக்க முடியாத மனித உயிர்களும் பலியிடப்படுகின்றன. எனவே இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டியதே - என்றார். (இ-3)

# அவல வாழ்வுக்கு முடிவு ஏற்பட ஒன்றுபட்டுச் செயற்படுவோம்

## புளொட் அமைப்பு புத்தாண்டுச் செய்தி

தொடரும் யுத்தம் நிறுத்தப்பட்டு தமிழ் மக்களின் அவலவாழ்வுக்கு முடிவு ஏற்பட புத்தாண்டில் சகலரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

மேற்கண்டவாறு யாழ்.மாநகர சபை புளொட் உறுப்பினர்கள் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புத்தாயிரமாம் ஆண்டின் இரண்டாவது புதிய வருடம் பிறந்துள்ள இந்நாளில் பகைமைகள், குரோதங்கள் [illegible] நீங்கிடவும் - மனிதப் படுகொலைகள் பாலியல் வல்லுறவுகள் தொடர காரணமாகவுள்ள தொடரும் கொடிய யுத்தம் நிறுத்தப்பட்டு தமிழ் பேசும் மக்களின் அவல வாழ்விற்கு முடிவு கிடைத்து சாந்தி சமாதானம் ஏற்படவும்-

மதத்தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகள் அரசியல் தலைவர்கள், மற்றும் மக்கள் நலனில் அக்கறை கொண்டோர் அனைவரும் ஒன்று பட்டு ஒரே கொள்கையில் செயல்பட்டு, ஒற்றுமையுடன் குரல் கொடுக்கவேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் மாநகர சபையினால் நீதியாகவும் நேர்மையாகவும் மேற்கொள்ளப்படும் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் அனைத்திற்கும் பூரண ஒத்துழைப்புநல்கி நகரம் வளம்பெற வர்த்தகர்கள் பொதுமக்கள் அனைவரும் செயல்படவேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம். அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்-என்றுள்ளது. (இ-3)

## பிறந்த தின பூர்த்தி விழா

யாழ்ப்பாணம்,ஜன.1

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 76 ஆவது பிறந்த தினப் பூர்த்தி விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை துர்க்கா தேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பிறந்தநாள் அறநிதிய வட்டியில் இருந்து கண் சத்திரசிகிச்சைக்கான அன்பளிப்பும், 'பெண்மைக்கு இணையுண்டோ' என்ற நூல் வெளியீடும் விழாவில் இடம்பெறும்.

வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் 150 மேல் வகுப்பு மாணவர்களுக்கு பாடசாலைக் கல்விக்கான உதவு தொகைகளும் வழங்கப்பட உள்ளன.விழா நிகழ்ச்சிகள் காலையும், பிற்பகலும் இரு அமர்வுகளாக நடைபெறும். (ஜ-15)

## சமயச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜன.1

புலோலி புற்றளைப் பிள்ளையார் கோவிலில் திருவெம்பாவை உற்சவத்தை ஒட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சமயச் சொற் பொழிவு நடைபெற உள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா "மணிவாசகரின் பத்தி வழி" என்னும் பொருளில் உரையாற்றுவார். (அ)


2001 இல்........

சுவைப்பிரியர்களுக்கு

ஓர் நற்செய்தி!

சுகாதார முறைப்படி,சுவை, தரத்துடன் தயாரிக்கப்பட்ட சகல சிற்றுண்டி வகைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய சுவையகம்

சிந்துஜா உணவகம்

சகல சிற்றுண்டி வகைகளும் ஓடர்களுக்கு செய்து தரப்படும் -

ஒருமுறை வாருங்கள்

மறுமுறையும் வரத்தூண்டும்

பிரதான வீதி,
கல்வியங்காட்டு சந்தி- (C/14586) உரிமையாளர்: காளமந்தன்.


## யாழ். புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலய

### 125 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள்

யாழ்.புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலயம் தனது கல்விச் சேவையில் 125 ஆவது ஆண்டினை 2001 இல் நினைவு கூரும் முகமாக பழைய மாணவர் சங்கத்தினர் இவ் நினைவு ஆண்டில் முதற்செயற்பாடாக வருட முதல் நாளாகிய இன்று ஆரம்ப நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

இதில் முதல் நாள் பாடசாலைக்கு வருகைதரவிருக்கும் ஆசிரியர்களை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வும், பாடசாலையின் கல்விச்சேவையின் 125 ஆவது ஆண்டினை நினைவு கூரும் வகையில் அழகுற அச்சிடப்பட்ட ஆவணக்காப்பு அட்டை(File) வெளியீடும், பாடசாலை, மாணவர் நன்மை கருதி அமைக்கப்பட்ட பாடசாலை உபகரண விற்பனை நிலையம், சிற்றுண்டிச்சாலை, ஆகியவற்றின் திறப்பு விழாவும் இடம்பெற உள்ளன.

காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அழைக்கப்படுகின்றனர்.

*பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பழைய மாணவர் சங்கம்,
புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலயம். (C/14592)

# நிவாரண அட்டை மீளாய்வை நிறுத்துமாறு கோரிக்கை

நிவாரண அட்டைகள் மீளாய்வு செய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்பட்டு, நிவாரணம் பெறுவதற்கான வருமான எல்லையை மூன்று மடங்காக அதிகரிக்க வேண்டும். மேற்கண்டவாறு யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இது தொடர்பாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, வடக்கு புனர்வாழ்வு,புனரமைப்பு வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சமூகசேவைகள் அமைச்சர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.அரசாங்க அதிபர் ஆகியோருக்கு இது தொடர்பான மகஜர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மிருசுவில் படுகொலை தொடர்பாக பூரண விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று சட்டமா அதிபருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைப்பது என்றும் -

சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாக யாழ்.பல்கலைக் கழக சமூகத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்துச் செயற்பாடுகளுக்கும் மனிதநேய அமைப்புக்கள் முழுமையாக ஆதரவு வழங்கவேண்டும என்றும்- இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.(இ-5-6 )

# வன்னியில் வெடி பொருள்கள் மீட்கப்பட்டு செயலிழப்பு

ஒட்டுசுட்டான் நெடுங்கேணி எல்லைக்குட்பட்ட சமணங்குளம், மகாஇலுப்பை ஆகிய இடங்களில் இருந்து வெண்புறா நிறுவன கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் பெருமளவில் வெடிபொருள்கள் மற்றும் ஷெல்கள் என்பன கண்டெடுக்கப்பட்டு செயலிழக்கப்பட்டன. என்று வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

120 மி.மீற்றர் ஷெல்கள்-20, 60 மி.மீ. ஷெல்கள் -80, 81மி.மீ. ஷெல்கள் -250, எம்.75ரக குண்டுகள் -5, ஆர்.பி.ஜி. ஷெல்கள்-45, வாகன மிதிவெடிகள்-4, கிளைமோர் குண்டுகள்-5, மிதிவெடிகள்-50, என்பன வெடிக்காத நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அவை அந்த அந்த இடத்தில் வைத்தே செயலிழக்கச்செய்யப்பட்டன. (இ-3)

## பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்

# ஊழியர் வேதனத்தை உடன் வழங்க நடவடிக்கை எடுக்குக!

## அதிகாரிகளுக்கு டக்ளஸ் பணிப்பு

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான வேதனத்தை உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு கிழக்கு தமிழ்விவகார அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பணித்துள்ளார்.

இந்த ஊழியர்களுக்கு கடந்த ஒரு வருட காலமாக வேதனம் எதுவும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வேதனம் வழங்கப்படாமையினால் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் அமைச்சரை நேரில் சந்தித்து தமக்குரிய வேதனத்தைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஊழியர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் இந்த ஊழியர்களுக்குரிய வேதனத்தை வழங்குமாறு தமது அமைச்சின் செயாலாளரூடாக கூட்டுத்தாபன தலைவருக்கு பணிப்புரை வழங்கினார். (இ-5)

## அந்தியேட்டி அழைப்பு

அன்புடையீர்,

தும்பளையை வாழ்விடமாகக் கொண்ட

**திரு.அருட்பிரதாசன் முரளீதரன்**

(கலைவாணி நகைமாட உரிமையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 03. 01. 2001. புதன்கிழமைகாலை 07 மணி அளவில் நெல்லண்டை முத்துமாரி அம்மன் தேவஸ்தான அந்தியேட்டி மடத்தில் நடைபெறும்.

மேற்படி நிகழ்விலும் தொடர்ந்து வீட்டுக்கிருத்திய சபிண்டீகரணக் கிரியையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
மனைவி மு.யசோ,
தகப்பன் பெ.அருட்பிரதாசன்,
மாமனார் ஆ.பாலச்சந்திரன
(வாணி நகை மாளிகை)

*திகிரி ஒழுங்கை,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.* (C/14594)

## இதய அஞ்சலி

அருள்மிகு நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான பிரதம குருவும் வேதாகம பாண்டித்தியரும், ஆலய நிர்மான விற்பன்னரும், கிரியாகலாப மணியும் ஆகிய

***சிவஸ்ரீ சுவாமிநாத. இராஜேந்திர சிவாச்சாரியார்***

அவர்கள் சிவபதப்பேறு பெற்றமையைக் குறித்து குருக்கள் அவர்களுடைய உபயபாதாரவிந்தத்திற்கு எமது இதய அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

"ஐயகோ எம் குருவே என்கோ அருமாமணியே யென்கோ
செய்சீர் மனத்தாயென்கோ செந்தமிழின் சுவையென்கோ
உய்யவொருவார்த்தையுரையா தெங்கொளிந்தாயையா
நைகின்றோம் நைகின்றோம் நாமினிச் செய்வதென்னை"

அல்வாய் வடக்கு வியாபாரிமூலை,
வீரபத்திர சுவாமி ஆலய
(82405) தர்மகர்த்தாவும், பரிபாலன சபை அடியார்களும்.

## மரண அறிவித்தல்

### குமரேசு சதாசிவம்

தும்பளை மேற்கு பருத்தித்துறையைச் சேர்ந்தவரும், ஓமானில் படவரைஞராகக் கடமை புரிந்தவருமாகிய குமரேசு சதாசிவம் அவர்கள் 29-12-2000 (வெள்ளிக்கிழமை) ஓமானில் அகால மரணமடைந்தார்.

அன்னார் பேபி சரோஜாவின் அன்புக் கணவரும், குமுதா, ஸ்ரீகாந், வனஜா ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*புதுவளவு,*
*தும்பளை மேற்கு, பருத்தித்துறை.* (C/14593)

தகவல்:
குடும்பத்தினர்.

# மன்னார் ஆயர் புத்தாண்டுச் செய்தி

வவுனியா,ஜன.1

இனப்பிரச்சினைக்கான சமாதானம் பல தடைகளால் சுமையேற்றப்பட்டிருப்பினும் அதில் நின்று கவனமாக அடியெடுத்து வைக்க வேண்டியது சம்பந்தப்பட்ட தரப்புக்களின் கடப்பாடு ஆகும். ஆகவே அவை தமது பொறுப்பில் நிதானமாகச் செயற்பட வேண்டும்.

மன்னார் ஆயர் ராயப்பு யோசப் தனது புத்தாண்டுச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யுத்தத்திற்கு முடிவு காண மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருகின்றன.

நாட்டுமக்கள் அனைவரும் பல்லின மொழி, கலாசாரங்களைக் கொண்டிருப்பினும், அவர்கள் சமத்துவ உரிமை கொண்டவர்கள் என்ற அடிப்படையிலும் -

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தம்மைத்தாமே ஆண்டு முன்னேறும் உரிமை உடையவர்கள் என்ற வகையிலும்-

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் கட்டியெழுப்பப்படும் நிரந்தர அமைதிக்கான உறுதியான சமாதானத்தையே கத்தோலிக்கத் திருச்சபை வரவேற்கிறது.

இந்த வேளையில் இந்த நாட்டில் சகல இன மக்களும் கைகோர்த்து இந்த உயரிய பணிக்காகச் செயற்பட வேண்டும் - இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## திருகோணமலையில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை,ஜன.1

திருகோணமலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடியை எதிர்த்து நேற்று திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றி நிவாரண விநியோகத்தைச் சீராக்குமாறு கோரிக்கை விடுத்தனர். (இ-8)

# புலிகளின் யுத்தநிறுத்தம் போர்த் தந்திரோபாயம்

## தூரதர்ஷனுக்கு கதிர்காமர் பேட்டி

கொழும்பு,ஜன.1

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தம் அவர்களின் போர்த்தந்திரோபாயம் ஆகும்.

இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். தூரதர்ஷனுக்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகள் யுத்தத்தில் பின்னடைவுகளைச் சந்திக்கும் வேளைகளில் யுத்தநிறுத்தத்தை அறிவிப்பது வழமை ஆகும்.

1995 ஆம் ஆண்டிலும் புலிகள் யுத்தநிறுத்தத்தை அறிவித்திருந்தனர். இதனை அரசும் அங்கீகரித்து யுத்தநிறுத்தம் செய்தது. ஆனால் இதனைப் புலிகள் தமது போராட்டத்துக்கு வலு சேர்க்கும் வகையில் பயன்படுத்திக்கொண்டனர் - என்றார்.

# மின்னல் தாக்கியது

வெள்ளவத்தை மூர் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் மின்னல் தாக்கியதால் தென்னைமரம் ஒன்று எரிந்து சாம்பரானது.

தென்னைமரம் எரிந்ததை அடுத்து, அங்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீ பரவாமல் அணைத்தனர்.

மின்னல் தாக்கியதால் அந்தப் பகுதியில் உள்ள வீடுகளிலிருந்த மின்சார உபகரணங்கள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# சாவகச்சேரியில் நீதிமன்ற கட்டடமும் பலத்த சேதம்

சாவகச்சேரியில் நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் ஆகியவை இயங்கி வந்த கட்டடம் பலத்த சேதங்களுக்கு இலக்கான நிலையில் காணப்படுவதாக அங்கு ஆவணங்களை மீட்டுவரச் சென்றவர்கள் தெரிவித்தனர்.

சேதங்களுக்கு மத்தியிலும் அங்கு காணப்பட்ட முக்கியமான ஆவணங்கள், பதிவேடுகள் சிலவற்றையும் ஊழியர்களின் சுயவிவரக் கோவைகள் சிலவும் மீட்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை கட்டடத்திற்கும் சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கிக் கிளை கட்டடத்துக்கும் இடையில் இருந்த தனியார் விடுதியொன்றில் நீதிவான் நீதிமன்றமும், மாவட்ட நீதிமன்றமும் இயங்கிவந்தன. அந்தக் கட்டடமே தற்போது சேதமடைந்துள்ளது. வழக்குக் கோவைகள் உட்படப் பல ஆவணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பனவும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீதிவான் அபிரேம்சங்கர், நீதிமன்றங்களின் உத்தியோகத்தர்கள், பொலீசார் ஆகியோர் நீதிமன்ற ஆவணங்களை மீட்டுவரச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்ற வளவில் இருந்த கிணறு மூடப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

# யுத்தநிறுத்தத்தை அறிவித்திருந்த வேட்டுக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. சில முகாம்களில் இருந்து ஷெல்களும் ஏவப்பட்டன. பராலைற்றுக்கள் காரணமாக யாழ்.நகரப் பகுதி நள்ளிரவில் ஒளி வெள்ளமாகக் காட்சியளித்தது. ஊரடங்கு நீக்கப்பட்டதால் பெரும்பாலான தேவாலயங்களில் நள்ளிரவு ஆராதனைகள் நடைபெற்றன. பெரும் எண்ணிக்கையில் மக்கள் இவற்றில் கலந்து கொண்டனர். புத்தாண்டு பிறந்த சமயம் தேவாலயங்களில் மணி ஓசையும் ஒலித்தது. (இ-3)

# நோர்வேத் தூதுவர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னோடியாக இரு தரப்பினரும் தெரிவித்த சில யோசனைகள் காரணமாக இந்த முயற்சிகளில் தேக்க நிலை காணப்பட்டது.

இந்தத் தேக்க நிலையை நீக்கும் பொருட்டே புதிய யோசனைகளுடன் எரிக் சொல்ஹெய்ம் இவ்வாரம் கொழும்பு வருகின்றார்.

புதிய யோசனை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட ஏனைய முக்கியஸ்தர்களுடன் அவர் கலந்துரையாடுவார் என்று மேற்குலக இராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பேச்சுக்களை முடித்த கையோடு லண்டன் சென்று அவர் விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேசுவார் என எதிர்பார்க்கப்படுவதாவும் தெரிவிக்கப்பட்டது.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இரு தரபுகளும் நல்லெண்ணத்தை உருவாக்கக் கூடிய செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என நோர்வே கருதுவதாகவும் -

அதற்கு ஏற்ற வகையிலான யோசனையுடன் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு வருவதாகவும் - கூறப்பட்டது.

தற்பொழுது நிலவும் தேக்க நிலையை நீக்கி இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு இட்டுச் செல்வதற்கு நோர்வேயின் விசேட தூதுவர் தெரிவிக்கவுள்ள யோசனைகளில் பின்வரும் அம்சங்கள் உள்ளடங்கி இருப்பதாக நம்பப்படுகின்றது.

அவையாவன:-

☆ புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்குத் தேவையான எரிபொருள்கள், மருந்து, உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவதற்கு அரசு விதித்துள்ள கட்டுப்பாட்டை நீக்குதல்.

☆ வடக்கு - கிழக்குக்கு வெளியே நடத்தும் தாக்குதல்கள் மற்றும் தற்கொலைத் தாக்குதல்களை புலிகள் நிறுத்துதல்.

☆ புலிகளின் பாதுகாப்பில் உள்ள அரச படையினரை விடுவித்தல்.

☆ யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க சர்வதேசக் குழு ஒன்றை நிறுவுதல்.


இணைந்த கணிதம்
(COMBINED MATHS)
பிரத்தியேக வகுப்பு
A/L 2003
S.இலட்சுமணன்
ஆரம்பம்: 2001.01.06 சனி நண்பகல் 12.00 (பு.நே.)
இடம்: 410, K.K.S. Road, யாழ்ப்பாணம்,
பதிவுகளை 06.01.2001ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளவும்.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. (C/14589)

A/L 2003
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்:
ஜனவரி 06
காலை 8.00 மணி
DMI
யாழ்நகர்.
(81298)

புதிய வீடியோ CD வெளியீடு
சிம்ரன் நடித்த
☆ சம்மதம் தருவாளா?
பிரமிட் CD
☆ வாத்தியார் வீட்டுப் பிள்ளை
☆ சிவசங்கரி
☆ பாபு
☆ ஒரு தாய் மக்கள்
☆ கண்ணன் என் காதலன்
☆ இதயக் கமலம்
☆ குடும்பத் தலைவன்
விஷ்ணு வீடியோ
K.K.S. வீதி,
கோண்டாவில்.
(82406)

எம்முடன் இணைந்த அன்பு உள்ளங்கட்கு
எமது இனிய புதுவருட நல் வாழ்த்துக்கள்.
தரம் 03 முதல் 11 வரை
புதிய பாட அலகுகள்
ஆரம்பமாகின்றன
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
ஜனவரி 06ம் திகதியுடன்
அனுமதிகள் நிறுத்தப்படும்.
-அதிபர்-
The Express Institute
Irupalai, Kopay.
THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS
NG.

அலைவருக்கும்
DCS இன்
இனிய புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
WELCOME 2001
DCS இன் 2001/2002 கல்வியாண்டுக்கான 5000
மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்
குடாநாட்டிலுள்ள சகல தரப்பினருக்கும் ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட கற்கைநெறிகள்.
திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட கைநூல்கள் (Handouts), செய்முறைக்கையேடுகள் (Practical tutes) என்பனவற்றுடன் பொதுச்செய்முறை (Common practical) உள்ளடக்கிய சிறப்பான விரிவுரைகள்.
பாடசாலை மாணவர்களுக்கு பரீட்சைக்கட்டணம் இன்றி இலவச நுழைவுத்தேர்வுப் போட்டிப்பரீட்சை, மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விபரங்களையும் எமது அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
மாணவர்களின் வசதி கருதி January 2001, April 2001, September 2001 ஆகிய மூன்று பிரிவுகளாக கற்கைநெறிகள் ஆரம்பமாவதுடன், இப்பிரிவுகள் யாவும் வாரநாட்களில் காலை, மாலை வகுப்புகளாக நடைபெறும்.
விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகங்களிலும் குடாநாட்டிலுள்ள சகல பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவுத்திகதி 05-01-2001
DCS
COLLEGE OF COMPUTER TECHNOLOGY
(British ACP Recognised Training Centre)
T.P: 021-2596 e-mail: dcsjaf@sltnet.lk
124/2, Palaly Road, Thirunelvely.
P.O Box No: 144 M.M.V Road, Nelliady.

2001 ஆம் ஆண்டில் எமது
வாடிக்கையாளர்களுக்கு
மகிழ்ச்சி பொங்கும் புத்தாண்டு
வாழ்த்துக்கள்!
✪ பாடசாலை உபகரணங்கள்
✪ கொப்பி வகைகள்
✪ எழுது பொருள்கள்
✪ காகிதாதிகள்
தரமாகவும், நியாயமான விலையிலும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள-
அற்புதா ரேடிங் கொம்பனி
198, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:2505 (பஸ் நிலையம் முன்பாக) (C/14445)

அல்டி எலக்ரோனிக்ஸ்
வாடிக்கையாளர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
மலரும் 2001 ஆம் ஆண்டில் நாம் உங்களுக்கு வழங்கவிருக்கும் கணனியின் சேவைகள்
☛ நீங்கள் விரும்பும் சினிமாப் படப் பாடல்களை வீடியோ CD யில் பதிவுசெய்தல்.
☛ உங்கள் வீடுகளில் நிகழும் மங்களகரமான நிகழ்வுகளை CD யில் பதிவுசெய்தல்.
☛ கணனியின் Soft ware களைப் பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக விவரங்களுக்கு நீங்கள் நாடவேண்டிய முகவரி :
அல்டி எலக்ரோனிக்ஸ் இல.15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/14589)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன் - புத்தாண்டுச் சிறப்பிதழ் - 2001

# வாழ்த்துக்களுக்கு வலிமை சேர்ப்போம்

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்...த்...து...க்...க...ள். வார்த்தையாகி வந்த வாழ்த்து வலிமையற்றுப் போகிறது.

புதிய ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்கும்போதே வாழ்த்துத் தெரிவிப்பதில் சலிப்புத் தோன்றுகிறது.

ஏன் இந்த நிலை?

பாழாய்ப் போன யுத்தம் தான் காரணம். தயாராகவிருந்த பதில் வந்து விழுகிறது. ஒத்துக்கொள்ளலாம், போர் மட்டுமே இதற்குக் காரணமாக இருந்தால்......

ஆனால் பட்டுப்போன மரத்துக்குப் பால் வார்க்க இரவும் பகலும் வெட்டிப்பயணம் செய்வது போல் போலி வாழ்க்கை வாழத் துடிக்கிறோமே. அதற்கு யுத்தமா காரணம்?

சீதனப் பேயை மணவறையில் இருத்தி விட்டு, முதிர் கன்னிகளை மூலையில் முடக்கி அழவிடுகின்றோமே...

போர் என்று போக்குக் காட்ட முடியுமா?

